
www.tamilarangam.net

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

# COUNCIL OF NGOs, JAFFNA DISTRICT




## 14வது ஆண்டறிக்கை

## - 15.11.2004 -

COUNCIL OF NGOs,JAFFNA.

இல. 40, கோவில் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 021 – 222 3668 மின்னஞ்சல் : **cngosj@sltnet.lk**

## *அன்புடன் உங்களோடு...............*

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இன்று **15வது சேவை ஆண்டில்** நுழைகின்றது. பதினான்கு வருடங்களில் இணையம் இந்த மாவட்டத்தில் பல சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து அதன் செயற்பாடுகளைச் செயலாற்றி வந்தமை சாதனைக்குரிய செயலாகும்.

கடந்த காலங்களில் இந்த மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக மக்கள் எதிர் நோக்கிய இழப்புக்களையும், பாதிப்புக்களையும், அவ்வப்போது தேசிய, மற்றும் சர்வதேச மட்டங்களுக்கு உரியவாறு, பாதிக்கப்பட்ட மக்களின் நிலைப்பாட்டிலிருந்து இணையம் எடுத்துக்கூறி வந்துள்ளது.

புனரமைப்பு, அபிவிருத்தி, புனர்வாழ்வு என்ற பெயரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற அவலங்களை இணையம் வெளிக்கொணர்ந்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**"ஒன்றிணைவோம் - சேவை செய்வோம்"** என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இணையத்துடன் இணைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுதியான ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இணையம் தொடர்ந்தும் அதன் ஆரோக்கியமான பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வகையில் இணையத்தின் அங்கத்துவ நிறுவனங்கள் 2004ஆம் ஆண்டில் மாவட்டத்தில் அமுல்படுத்திய வேலைத் திட்டங்களின் தொகுப்பு இவ் வருடாந்த அறிக்கையில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

இதன் மூலம் இணையத்தின் பங்காளிகளின் சேவைகளின் தன்மைகளையும், அதன் வழியில் மாவட்டத்தின் புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு செலவிடப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் அறியக்கூடியதாகவுள்ளது.

இணையம் தொடர்ந்தும் அதன் பணிகளை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. கடந்த காலங்களில் எமக்கு அனைத்து வழிகளிலும் உதவிய சகல தரப்பினருக்கும் நாம் இந்த வேளையில் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உள்ளே நகருங்கள்…………

இணையச் சேவையிலுள்ள

வி. ஸ்ரீசக்திவேல்
கௌரவ தலைவர்

ஜெ. யோசப்
கௌரவ செயலாளர்

*"நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும் அங்கு தீமைகள் வளர்ந்துவிடக் கூடாது"*

உள்ளடக்கம்

1. மகளிர் அபிவிருத்தி நிலையம்
**CENTRE FOR WOMEN DEVELOPMENT (CWD)**

2. குடும்ப புனர்வாழ்வு நிலையம்
**FAMILY REHABILITATION CENTRE (FRC)**

3. மனித முன்னேற்ற நிலையம்
**HUMAN DEVELOPMENT CENTRE (HUDEC)**

4. சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்
**INSTITUTE OF NURSERY STUDIES AND GENDER DEVELOPMENT (INS-GD)**

5. அறவழிப் போராட்டக் குழு
**NON VIOLENT DIRECT ACTION GROUP (NVDAG)**

6. வட இலங்கை சர்வோதயம்
**NORTH CEYLON SARVODAYAM (NCS)**

7. ஊற்று நிறுவனம்
**OOTRU ORGANISATION**

8. மக்கள் நலன்காக்கும் பிரிவு
**PEOPLE's WELFARE ORGANISATION (PWO)**

9. சர்வோதயம்
**SARVODAYA**

10. சமூக அபிவிருத்தி மன்றம்
**SOCIAL DEVELOPMENT FOUNDATION (SDF)**

11. இலங்கை செஞ்சிலுவை சங்கம் - யாழ் கிளை
**SRI LANKA RED CROSS SOCIETY – JAFFNA BRANCH (SLRCS)**

12. தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
**TAMILS REHABILITATION ORGANISATION (TRO)**

13. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
**THE REFUGEES REHABILITATION ORGANISATION (TRRO)**

14. வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம்
**WHITE PIGEON TECHNICAL INSTITUTE OF PROSTHESIS**

15 **RAIN WATER HARVESTING PROJECT IN THE NORTH**

16 **MEETINGS WITH FOREIGN AND LOCAL DIGNITARIES**

# மகளிர் அபிவிருத்தி நிலையம்
# CENTRE FOR WOMEN DEVELOPMENT (CWD)
## செயற்பாட்டு அறிக்கை ~ 2004

மகளிர் அபிவிருத்தி நிலையம் 2004 ஆம் ஆண்டில் செயற்படுத்தி வரும் செயற்றிட்டங்களாவன.

01) கருத்தரங்குகளும் - பயிற்சி முகாம்களும்
02) மக்கள் பரிமாற்ற செயற்றிட்டம்
03) இலவச சட்ட ஆலோசனை
04) சட்டம் சார் கருத்தரங்குகள்
05) கிராமிய பெண்கள் சேமிப்புத்திட்டம்
06) கல்வி உதவித்திட்டம்
07) ஆய்வு அறிக்கைகள்
08) பெண்களுக்கெதிரான வன்முறைகள்
09) இளம் சமாதான தூதுவர்கள்
10) போசாக்குத் திட்டம்
11) சிறப்பு நிகழ்வுகள்
12) நங்கை - சஞ்சிகை

### 01) கருத்தரங்குகளும் - பயிற்சி முகாம்களும்

போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பெண்களை சமாதானத்தின் முகவர்களாக செயற்படுத்துவது தொடர்பாக பல பயிற்சிகள் நடாத்தப்பட்டன. இக்கருத்தரங்குகளில் தென்பகுதியிலிருந்து பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அ) சமாதானம், மீளினக்கம், அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்கு மக்களுடனான கருத்தரங்கு
ஆ) முறைசாரா பெண் தொழிலாளர்களை சமாதானத்தின் வலுவிற்காக தயார் செய்தல்
இ) சமாதான முன்னெடுப்பில் தற்போதய அரசியல் நெருக்கடி
ஈ) சமாதானத்தைக் கட்டியெழுப்பலில் பெண்கள் கூட்டு முயற்சி
உ) சமாதானத்தில் மக்களின் பங்களிப்பு

### 02) மக்கள் பரிமாற்ற செயற்றிட்டம்

மேற்படி இரு நிகழ்ச்சித் திட்டங்கள் கொழும்பு – யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - கொழும்பு என்ற பரிமாற்றத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் போர் எதிர்ப்பிற்கான தேசிய முன்னணியினர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### 03) இலவச சட்ட ஆலோசனை

எமது நிலையத்தில் இலவச சட்ட ஆலோசகராக சட்டத்தரணி திருமதி. பவானி சற்குணராசா அவர்கள் செயற்படுகின்றார். இத்திட்டத்தின் கீழ் வருமானமற்ற பெண்கள் வன்முறைகட்கு உட்படும்போது அவர்கட்கு இலவசமாக சட்ட உதவி வழங்கப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| * | வீட்டு வன்முறை காரணமாக | - | 24 பேரும் |
| * | ஆதன உரிமை தொடர்பாக | - | 04 பேரும் |
| * | பிறப்பு சான்றிதழ் பெறுவதற்காக | - | 06 பேரும் |
| * | மனித உரிமை மீறல் தொடர்பாக | - | 05 பேரும் |
| * | தாபரிப்பு வழக்கு தொடர்பாக | - | 09 பேரும் |

இவ்வாண்டில் சட்ட உதவி பெற்றுள்ளனர்.

### 04) சட்டம் சார் கருத்தரங்குகள்

அ) பெண்கள் / ஆண்கள் இருபாலாருக்கும் சட்டம் தொடர்பான குறிப்பாக பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள், கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக 10 கிராமங்களில் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

ஆ) மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. கிராமிய உழைப்பாளர் சங்கம் இந் நிகழ்வின் பங்காளியாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ் விழாவில் 300 ற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

### 05) கிராமிய பெண்கள் சேமிப்புத்திட்டம்

கிராமிய இளம் பெண்கள் சேமிப்பின் மூலம் தமக்குரிய ஓர் சிறு மூலதனத்தை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டு இச் சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு கிராமங்களில் அதாவது, கைதடி, சண்டிலிப்பாய், நாவாந்துறை, வேலணை ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் 10 பெண்களாக 40 பெண்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் மகளிர் அபிவிருத்தி நிலையம் ரூபா 200.00 இலவசமாக வங்கியில் சேமிப்பில் இட்டு வருகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் சேமிப்போடு வருட இறுதியில் ரூபா 5000.00 மேல் ஓர் சிறு தொகையை தமது சொந்தப்பணமாக பெற்று ஓர் சுயதொழிலை ஆரம்பிக்க முடியும்.

### 06) கல்வி உதவித்திட்டம்

வருட ஆரம்பத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவ மாணவிகட்கு ஊக்குவிப்பாக கல்விசார் உபகரணங்களை வழங்கிவருகின்றது. இவ்வருடம் 300 மாணவ, மாணவிகள் இவ் உதவியைப் பெற்றுக்கொண்டனர். இவ் உபகரணங்களைப் பெறுவதற்கு யாழ் வர்த்தகர்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. மேலும், வெளிநாட்டு அன்பர்களின் உதவியுடன் 10 வறிய மாணவிகளின் கல்விக்கான உதவியாக எமது நிறுவனத்தினூடாக மாதாந்தம் ரூபா 1000.00 வழங்கப்படுகின்றது.

### 07) ஆய்வு அறிக்கைகள்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் சமூக பொருளாதார புள்ளிவிபரத் தரவுகள் அறிக்கைகளாக தயார்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு, திட்டமிடல் நடவடிக்கைகட்கும், பல்கலைக்கழக மாணவர்கட்கும் இவை மிக அவசியமான தரவுகளாகும்.

### 08) பெண்களுக்கெதிரான வன்முறைகள்

அகதிகளுக்கான ஐ. நா. நிறுவனம் அனுசரனையுடன் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் பிரச்சார வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல், வீதிப் பிரச்சாரம், விளம்பரங்கள் ஒட்டல் போன்ற பிரச்சார நடவடிக்கைகள் செய்யப்பட்டது.

### 09) இளம் சமாதான தூதுவர்கள்

இளைஞர்கள் பங்குபற்றிய **"இளம் சமாதான தூதுவர்கள்"** என்னும் வேலைத்திட்டம் அவுஸ்ரேலிய சமாதான குழுவினரின் உதவியுடன் கொழும்பு அத்துருகிரியாவில் நடாத்தப்பட்டது.

### 10) போசாக்குத் திட்டம்

கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கட்கான போசாக்கு நிறையாகாரம் எமது நிலையத்தில் தயாரிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கிராம மக்கள், முன்பள்ளி சிறுவர் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டம் கிளிநொச்சி வரை விரிவாக்கப்பட்டுள்ளது. இதற்குரிய நிதியுதவியை இலண்டனிலுள்ள "தமிழர் நிதியம்" வழங்கிவருகின்றது.

### 11) சிறப்பு நிகழ்வுகள்

அ) அரசியல் யாப்புரிமை தொடர்பாக – சர்வதேச இனங்களின் சமத்துவத்திற்கான கொழும்பு நிலையத்துடன் இணைந்து கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

ஆ) பாலியல் வல்லுறவு தொடர்பான சட்ட, மருத்துவ சான்றுகள் தொடர்பாக – சட்டத்திற்கும், சமூகத்திற்குமான அமைப்புகள் இணைந்து கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இ) கொழும்பு தேசிய மீனவ பேரவையுடன் இணைந்து கிராம மட்டத்தில் நான்கு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது. மேலும், நீர்கொழும்பில் பேரவையின் மூன்றாவது மாநாடு நடாத்தப்பட்டது.

**12) நங்கை - சஞ்சிகை**

எமது நிலையத்தினால் **"நங்கை"** மகளிர் சஞ்சிகை இதழ் வெளியிடப்பட்டு வருகின்றது.

- **குறிப்பு**

மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்கள் முன்னேற்றம் மட்டுமன்றி, முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ள பல விடயங்களிலும் கவனம் செலுத்தி அக்கறையுடன் பல செயற்டபாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

07, இரட்ணம் ஒழுங்கை
காங்கேசன்துறை வீதி
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

திருமதி. சறோஜா சிவச்சந்திரன்
பணிப்பாளர்

புதுமைப் பெண்ணாகப் புறப்படும் நங்கையரே !
அடிமை விலங்கொடிக்க அணிதிரள்வோம் வாரீர் !

www.tamilarangam.net

# குடும்ப புனர்வாழ்வு நிலையம்

# FAMILY REHABILITATION CENTRE (FRC)

## செயற்பாட்டு அறிக்கை – 2004

குடும்ப புனர்வாழ்வு நிலையம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) பயனாளிகள்
02) நோக்கம்
03) DANIDA நிதியுதவிச் செயற்பாடுகள்
04) UNICEF நிதியுதவிச் செயற்பாடுகள்
05) இணைந்த சேவை
06) அறிமுகமும், குறிக்கோளும்

### 01) பயனாளிகள்

எமது நிறுவனத்தின் பயனாளிகளாக,

i) DANIDA நிதியுதவித்திட்டத்தின் கீழ் பின்வருவோர் பயன்பெறுகின்றனர்.

அ) சித்திரவதைக்கு ஆளானோர்
ஆ) சித்திரவதைக்குட்பட்டவர்களின் குடும்பத்தவர்கள்
இ) குண்டுவெடிப்பினால் பாதிப்புற்றோர்
ஈ) யுத்தத்தால் விதவையானோர்
உ) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், அனாதைச் சிறுவர்கள், ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் இடர்ப்பட்ட சிறுவர்கள்
ஊ) வேறுவகையினர்

ii) UNICEF நிதியுதவித்திட்டத்தின் கீழ் பின்வருவோர் பயன்பெறுகின்றனர்.

அ) மிதிவெடியால் பாதிப்புக்குள்ளானோர்

### 02) நோக்கங்கள்

அ) ஆயுத வன்முறையால் பாதிக்கப்பட்டு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் கிலேசத்துடன் அவதியுறும் நபர்கட்கு வைத்திய சிகிச்சை, அங்கப்பயிற்சி, உளவளத்துணை மற்றும் பொருத்தமான சேவைகளை வழங்குதல்
ஆ) பொருத்தமானவர்களுக்கு உளவளத்துணை, நட்புதவி வலுவூட்டல், விளையாட்டு ஊடக நிகழ்ச்சி, சுகாதாரக்கல்வி என்பவற்றில் பயிற்சி கொடுத்தல்
இ) புனர்வாழ்வுக்கு உகந்தபடி நகர, கிராம, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
ஈ) ஆயுத வன்முறையினால் பாதிப்புற்ற இளைஞர்கட்கு சமூக பொருளாதார புனர்வாழ்வு நிலையை மேம்படுத்தல்
உ) இனங்களுக்கிடையே அமைதியை மேம்படுத்தல்

## 03) DANIDA நிதியுதவிச் செயற்பாடுகள்

| சேவை விபரம் | அமர்வுகள் | | |
|---|---|---|---|
| | யாழ்ப்பாணம் | தீவகம் | மொத்தம் |
| வைத்திய சேவை | 419 | 334 | 753 |
| அங்கப்பயிற்சி | 195 | 139 | 334 |
| உளவளத்துணை | 327 | 205 | 532 |

அ) விசேட வைத்திய ஆலோசகர் டாக்டர். ரி. கடம்பானந்தன் நிலையத்திற்கு மூன்று முறை வருகைதந்து பயனாளிகள் பலரை பார்வையிட்டதுடன் சிகிச்சைகள் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கி மேற்பார்வையும் செய்துள்ளார்.

ஆ) 10 சமூகத் தொண்டர்கள் மேற்கொண்ட பின்தொடர் தரிசிப்புக்கள் - 681

இ) ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் குடும்பப் புனர்வாழ்வு நிலையக் காரியாலயத்தில் (18, கோயில் வீதி, யாழ்ப்பாணம்) மருத்துவ சிகிச்சை (மருந்து உட்பட), அங்கப்பயிற்சி சிகிற்சை, உளவளத்துணை ஆகியன இலக்கு பயனாளிகளுக்கு வழங்கப்படுவதுடன், காரைநகர், வேலனை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் மாதாந்தம் மருத்துவ சேவையும் நடாத்தப்படுகின்றது.

## 04) UNICEF நிதியுதவிச் செயற்பாடுகள்

அ) வீட்டுத்தரிசனங்கள் - 978
உளவளத்துணை - 334 அமர்வுகள்
மிதிவெடியினால் பாதிப்புற்ற பயனாளிகள் - 107

ஆ) சமூக உளவளத்துணை வலைப்பின்னல் குழு கூட்டங்கள் 5 தடவைகள் நடைபெற்றன. இக்குழு மூலம் சுய வேலைவாய்ப்பு கடனுதவி, கல்விக்கான அனுசரணை, அடிப்படைத்தேவைக்கான ஆலோசனையும், சிபாரிசும் ஆகிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இ) **"மிதிவெடியினால் பாதிப்புற்றோர் சங்கம்"** என்ற அமைப்பை உருவாக்குவதற்கான கிராமமட்டக் குழுக்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

## 05) குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் இணைந்த சேவைகள்

அ) SCOT நிதியுதவியுடன் போரினால் விதவையான 25 பேரிற்கு சுயவேலைவாய்ப்பு கடனுதவி தலா ரூபா 8,000.00 வழங்கப்பட்டது.

ஆ) போரினால் விதவையான ஐவரிற்கு CHA நிதியுதவியுடன் தலா ரூபா 6,000.00 சுயவேலைக்கடன் வழங்கப்பட்டது.

இ) JSAC நிதியுதவியுடன் சுயவேலைக்காக தையல் இயந்திரங்கள் பெற்ற எமது பயனாளிகள்

* சித்திரவதைக்குள்ளானோர் - 01
* சித்திரவதைக்குள்ளான குடும்பம் - 01
* போரினால் விதவையானோர் - 03
* மிதிவெடியினால் பாதிப்புற்றோர் - 02

ஈ) மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் நிதியுதவியுடன் 08 வறிய மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

18, கோயில் வீதி
யாழ்ப்பாணம்

எஸ். சீ. எஸ். சிதம்பரநாதன்
வலய இணைப்பாளர்

உள்நாட்டுப் போரினால் உடல் / உள ரீதியாகப் பாதிக்கப்பட்டோருக்கு பூரணமான சேவையை வழங்குவோம்

# மனித முன்னேற்ற நிலையம்

# HUMAN DEVELOPMENT CENTRE (HUDEC)
## செயற்பாட்டு அறிக்கை – 2004

மனித முன்னேற்ற நிலையம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01. எக்கோ நிதியுதவித்திட்டம்
02. நிக்கொட் உதவித்திட்டம்
03. சுயதொழில் ஊக்குவிப்புத்திட்டம்
04 துணையிழந்த பெண்களுக்கான திட்டம்
05. நடமாடும் மருத்துவ சேவை
06. முன்பள்ளி கல்வித் திட்டம்
07. உயிர்ப்பூட்டல் விழிப்புணர்வுத்திட்டம்
08. சமாதான ஊக்குவிப்புத் திட்டம்
09. பிரபோனி செயற்றிட்டம்
10. சத்துணவுத்திட்டம்
11. கல்வி உதவித் திட்டம்
12. மது போதை விழிப்புணர்வுத்திட்டம்
13. சிறுவர் பராமரிப்புத் திட்டம்

### 01) எக்கோ நிதியுதவித்திட்டம்

ஏக்கோ நிதியுதவித்திட்டத்தின் கீழ் கரித்தாஸ் பிரான்ஸ் அமைப்பின் உதவியுடன் யாழ்ப்பாணம், மாதகல், குருநகர், அரியாலை, பாஷையூர் ஆகிய பகுதிகளில் மீள்குடியேறும் வறிய மக்களின் வதிவிட பிரச்சினையைப் போக்க எவ்வித வேறுபாடுகளுமின்றி 120 தற்காலிக வீடுகளும் மற்றும் மாதகல், குருநகர் பகுதிகளில் 30 குடும்பங்களின் வீட்டுத்திருத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன. நாவாந்துறைப் பகுதியில் 74 பயனாளிகளிற்கும், புங்குடுதீவுப்பகுதியில் 99 பயனாளிகளிற்கும் சாவகச்சேரிப் பகுதியில் 67 பயனாளிகளிற்கும் வருமானம் ஈட்டுமுகமாக மொத்தம் 240 பயனாளிகளிற்கு மீன்பிடி வலைகளும் மட்டுவில், வரணி பகுதிகளில் 246 பயனாளிகளிற்கு விதைநெல், உரம், கிருமிநாசினி என்பன வழங்கப்பட்டன. மேலும், இப்பகுதிகளிலுள்ள 131 பயனாளிகளிற்கு மரக்கறி விதைகளும், நெடுந்தீவில் 30 கடற்றொழில் பயனாளிகளிற்கு தலா ரூபா 20,000.00 பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும், 18 விவசாய பயனாளிகளிற்கு நீர் இறைக்கும் வாளிகளும் மேலும் மட்டுவில், அளவெட்டி, வரணி, நெடுந்தீவு பகுதிகளில் 418 பயனாளிகளிற்கு தோட்டச் செய்கைக்கான விசேட மண்வெட்டியும், வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் வசித்து வரும் சுமார் 300 பயனாளிகளிற்கு மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்பட்டன.

### 02) நிக்கொட் திட்டம்

நிக்கொட் நிறுவனத்தின் அனுசரனையுடன் கியூடெக் இணைந்து குருநகர் பகுதியில் 120 வறிய குடும்பங்களிற்கு வீடுகள் புனரமைப்புச்செய்யப்பட்டு 29.10.2004 அன்று உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன.

### 03) சுயதொழில் ஊக்குவிப்பு திட்டம்

கப்போட் (CAFOD), மிசறியோ (MISEREOR) நிதியுதவித் திட்டத்தின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களிற்கு அவர்கள் வசிக்கும் பிரதேசங்களிலுள்ள விவசாய, மீன்பிடித்தொழில் மற்றும் சகோதரப் பகிர்வு வாழ்வு சங்கங்களினுடாக சுயதொழிலிலிற்கான கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக ரூபா 2,190,000.00 வழங்கப்பட்டு சுயதொழில் வருவாய்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

### 04) துணையிழந்த பெண்களிற்கான ஊக்குவிப்பு

போரினால் துணைவரை இழந்து தம் குடும்பப் பொறுப்பினை தாமே ஏற்க வேண்டிய நிலையில் உள்ள பெண்களை குழுக்களாகச் சேர்த்து அவர்களுக்கு சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அவற்றுள் கால்நடை வளர்ப்பு, சில்லறை வியாபாரம், சத்துணவு வகைகள் தயாரித்தல், சிற்றுண்டி வகைகள் தயாரித்தல் தையல், கிடுகு பின்னல் போன்ற சுயதொழில்களை சுழற்சிக்கடனுதவி திட்டத்தின் மூலம் ஊக்குவிக்கப்படுவதுடன், அவர்கள் சமூக வாழ்வில் தலைமைத்துவ பண்புகளை வளர்க்க சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் 184 பயனாளிகளும், மனித

அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள 35 மகளிர் அமைப்புக்களும் 265 பயனாளிகளும் இச் சுழற்சிக்கடன் உதவியை பெற்று வருகின்றனர்

### 05) நடமாடும் மருத்துவ சேவை

இத்திட்டம் கரித்தாஸ் மற்றும் லண்டனில் இயங்கும் மியோட் (MIOT) நிறுவனத்தின் உதவியுடனும், திருச்சிலுவைக் கன்னியர்களின் அனுசரனையுடனும் இளவாலை, சகாயபுரம், மாதகல், சாந்தை, உயரப்புலம், மந்துவில், உடுவில், மணற்காடு, கட்டைக்காடு, ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது. இச் சேவை மூலம் ஏறக்குறைய 700 பயனாளிகள் பயனடைகின்றனர்.

### 06) முன்பள்ளித் திட்டம்

எமது நிறுவனத்தின் செயற்பாடுகளில் முன்பள்ளித் திட்டமும் ஒன்றாகும். தற்போது வடமராட்சி, வடமராட்சி தெற்கு, தென்மராட்சி, வலிகாமம் வடக்கு – கிழக்கு, தீவகம் ஆகிய பகுதிகளில் 55 முன்பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இவ் முன்பள்ளிகளில் பணியாற்றும் 55 ஆசிரியர்களுக்கு மாதாந்தம் முன்பள்ளி மேம்பாட்டிற்கான தொடர் பயிற்சிகள் வழுங்கப்பட்டு வருகின்றன.

### 07) உயிர்ப்பூட்டல் விழிப்புணர்வுத்திட்டம்

தேசிய உயிர்ப்பூட்டல் திட்டத்தின் கீழ் பிரதேச வாரியான கிராமிய குழுக்களை ஒன்றிணைத்து மக்கள் குழுக்கள் இடம் அமைப்பதற்கான ஆயத்த முயற்சிளாக குழுத்தலைவர்கள் அடங்கிய 80 பேர் கொண்ட அங்கத்தவர்களுக்குள் இணைப்பாளர், ஊக்குவிப்பாளர்களால் மக்கள் குழுக்கள் அமைத்தல், முரண்பாடுகளைத் தீர்த்தல், சமூக பகுப்பாய்வு செய்தல் பற்றிய கலந்துரையாடல் இரண்டு நாட்கள் கியூடெக் மண்டபத்தில் இடம்பெற்றது. மக்கள் குழு அமைக்கும் செயற்பாடுகள் பிரதேச வாரியாக இடம்பெற்று வருகின்றது.

### 08) சமாதான ஊக்குவிப்புத் திட்டம்

எமது சமாதான ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் சமாதான முன்னெடுப்புக்களை மக்களின் பங்களிப்போடு முன்னெடுக்க கிராம, பங்கு, பாடசாலை மட்டத்திலிருந்து குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு தற்கால அரசியல், மனித உரிமைகள், வன்முறையற்ற வழியில் முரண்பாடுகளைத் தீர்த்தல் போன்ற சமாதான கல்வி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றது. மேலும் இனங்களுக்கிடையே புரிந்துணர்வை வலுப்படுத்த வடபகுதி, தென் பகுதிகளுக்கிடையிலான உறவுப்பாலம் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக குருநாகல் மாவட்டத்தில் மாணவர் ஒன்றுகூடல் நடாத்தப்பட்டது. இதில் யாழ் மாவட்டத்திலிருந்து 85 மாணவர்கள் பங்குபற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்களினால் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து நூல்கள் யாழ் நூலகத்திற்கு வழங்கப்பட்டன.

### 09) பிரபோதினி செயற்றிட்டம்

பிரபோதினி என்பது எழுச்சி என்ற பொருளைக் கொடுக்கின்றது. அதாவது பெண்களை எழுச்சி பெறச்செய்தல். இத்திட்டம் இலங்கையில் பத்து மாவட்டங்களில் தேசிய சமாதானப் பேரவையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ் மாவட்டத்தில் எமது நிறுவனத்தினால் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. எமது நிறுவனத்தினால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கிராமமட்டக் குழுக்களிலிருந்து 50 செயற்பாட்டாளர்களை தெரிவு செய்து அவர்களுடாக வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படுகின்றது. இவர்களுடன் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படுகின்றனர். கடந்த ஆறு மாதங்களில் இச் செயற்பாட்டாளர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு தலைமைத்துவம், பால்நிலை சமத்துவம், அரசியலில் பெண்களின் பங்கு, சர்வதேச மகளிர் தினம், கிராம மட்ட அறிமுக நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி எமது செயற்பாட்டாளர்களைப் பலப்படுத்தியுள்ளோம். இத்திட்டமானது, கருத்தியல் ரீதியானது என்பதனால் இனிவரும் காலங்களில் மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளதனை உணர்கின்றோம்.

### 10) சத்துணவுத்திட்டம்

யாழ் மாவட்டத்தில் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தில் எமது **"துணையிழந்த மாதர் சங்கத்தினால"** தயாரிக்கப்பட்ட சத்துணவு மா மூலம் காரைநகர், பருத்தித்துறை, சாவகச்சேரி, மிருசுவில் ஆகிய பகுதிகளில் உள்ள 40 முன்பள்ளிகளிலுள்ள 946 சிறார்களுக்கும், யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலுள்ள 17 பாடசாலைகளிலுள்ள 1480 மாணவர்களுக்கும் இத்திட்டத்தை செயற்படுத்திச் சத்துணவு வழங்கி வருகின்றோம்.

### 11) கல்வி உதவித்திட்டம்

யாழ் மாவட்டத்தில் வறுமையில் வசிக்கும் பிள்ளைகளுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவி வழங்கி வருகின்றோம். க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த. (உயர் தரம்) கற்கும் மாணவர்களின் நலன் கருதி மாதாந்தம் ரூபா 200.00 தொடக்கம் 300.00 வீதம் 32 மாணவர்களுக்கு நிதியுதவியும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் 22 பேருக்கு மாதாந்தம் ரூபா 500.00 வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பற்றீசியன் நிறுவனத்தில் தொழில்சார் பயிற்சியினை மேற்கொள்ளும் வறிய 25 மாணவர்களின் நலன்கருதி ரூபா 34,325.00 வழங்கப்படுகின்றது.

### 12) மதுபோதை விழிப்புணர்வுத்திட்டம்

மதுபோதையின் தாக்கம் அதிகரித்துள்ள கிராமத்து இளைஞர்கள், யுவதிகள் ஒன்றிணைக்கப்பட்டு மதுவிலக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் தாம் மதுவிற்கு அடிமையாகாது இருப்பதுடன் கிராமத்திலுள்ள ஏனையவர்களையும் விழிப்படைய வைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். இச்செயற்பாடு 07 கிராமங்களில் நடைபெற்று வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கான மதுபோதை தவிர்ப்பு விழிப்புணர்வு செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்னது.

### 13) சிறுவர் பராமரிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் உள்ள யாழ் மாவட்டத்தில் கோப்பாய் பகுதியில் **"பாசச்சோலை"** என்னும் சிறுவர் பராமரிப்பு இல்லம் இயங்கி வருகின்றது. இவ் நிலையத்தில் 19 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கு மாதாந்தம் ரூபா 32,500.00 செலவிடப்படுகிறது.

தியோகு ஒழுங்கை
மத்தியூஸ் வீதி
யாழ்ப்பாணம்

வண. பிதா. C. G. ஜெயக்குமார்
இயக்குனர்

துண்டுபட்ட தனிமனிதன் அல்ல,
ஒன்றுபட்ட மனிதகுலம் முன்னேற வேண்டும்
- பாப்பரசர் 6 ஆம் சின்னப்பர்-

# சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்
# INSTITUTE OF NURSERY STUDIES AND GENDER DEVELOPMENT (INS-GD)
## செயற்பாட்டு அறிக்கை – 2004

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) கிராமியச்செயற்பாடுகள்
02) கல்வித் திட்டங்கள்
03) பங்காளித்துவத் திட்டம்
04) வலுவிழந்தோர் திட்டம்
05) நலன்புரி நிலையத்திட்டம்
06) தொழிற்பயிற்சிகள்
07) ஆற்றல் மேம்பாட்டு பயிற்சிகள்
08) சிறு கைத்தொழிற்பேட்டை
09) பொதுவான திட்டங்கள்
10) கண்காட்சி
11) விழிபுணர்வுக்கான கருத்தரங்குகள்
12) வெளியீடுகள்
13) முயற்சியாளருக்கான சுழற்சிக்கடன்
14) ஆலயத்தினுடான பணித்திட்டம்
15) மரம் நடுகை
16) NECORD திட்டம்

### 01) கிராமியச்செயற்பாடுகள்

இந்து கலாசார அமைச்சின் அனுசரனையுடன் மூளாய் தெற்கு, காளி கோயிலடி, வேரம் போன்ற கிராமங்களை சேர்ந்த வீட்டுத்திட்டத்திற்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு முன்மொழிவு கொடுக்கப்பட்டது. ஆனால், அரசினால் சூழ்நிலை காரணமாக அத்திட்டம் அமுலாக்கப்படவில்லை. மேலும், பொன்னாலை கிராம மக்களுக்கு கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.

### 02) கல்வித் திட்டங்கள்

அ) கல்வியில் ஆர்வமுள்ள 33 மாணவர்களுக்கு ரூபா 6740.00 பெறுமதியான 468 அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

ஆ) கல்வியில் ஆர்வமுள்ள வசதி குறைந்த 100 மாணவர்களை தெரிவு செய்து அதில் 50 மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மாதாந்தம் ரூபா 200.00 வீதம் தியாகி அறக்கொடை நிறுவன உதவியுடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இ) சங்கானை கல்விக் கோட்டத்தில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க ஆங்கிலத்தில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 6 மாத கால பயிற்சி வழங்கப்பட்டு பரீட்சை நடாத்தி சித்தியடைந்தவர்களை மேற்படி கல்விக்கோட்டத்திலுள்ள 8 பாடசாலைகளுக்கு ஆங்கில தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஈ) சங்கானை கல்விக்கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளில் மெல்லக் கற்கின்ற மாணவர்களுக்கு பரிகார கற்பித்தல் வகுப்புக்கள் நடாத்தப்படுதுடன் மூளாய் AMTM, தொல்புரம் AMTM, வட்டு கார்த்கோயா ஆகிய மூன்று பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தலும், போசாக்கு உணவும் வழங்கப்படுகின்றது.

### 03) பங்காளித்துவத் திட்டம்

அ) சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனத்தின் உதவியுடன் சங்கானை பிரதேசத்திலுள்ள 9 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 32 குடும்பங்களுக்கு தலா ரூபா 15,000.00 பெறுமதியான மலசல கூடங்கள் வழங்கப்பட்டது.

ஆ) மொவிமொண்டோ திட்டத்தின் கீழ் சங்கானையில் 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் வழங்கியும், வழங்குவதற்குமான ஆயத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 04) வலுவிழந்தோர் திட்டம்

மூளாயில் வசிக்கும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வலுவிழந்த இரு குழந்தைகளுக்கு இரண்டு தள்ளு வண்டில்களும், வட்டுக்கோட்டையில் வசிக்கும் கால் ஊனமுடைய முதியவர் ஒருவருக்கு நாற்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது.

**05) நலன்புரி நிலையத்திட்டம்**

சமுத்திரா, கப்பண்டா, உடுகம்புலம், நல்லதம்பி, வேரம், தோப்பு, அமைதி, கம்பனை, நீதிமன்ற முகாம், ஓடக்கரை, முங்கோடை ஆகிய நலன்புரி நிலையங்களிலுள்ள 13 வயதிற்குட்பட்ட 490 பிள்ளைகளிற்கு உடுபுடவை வழங்கப்பட்டது.

**06) தொழிற்பயிற்சிகள்**

எமது நிறுவனத்தால் தையல், வெதுப்பக, உணவு பதனிடல், கடலுணவு பதனிடல், கைவேலை, வீட்டுத்தோட்டம் ஆகிய துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

**07) ஆற்றல் மேம்பாட்டு பயிற்சிகள்**

அ) வீட்டுத்தோட்ட உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 30 பயனாளிகளுக்கு திருநெல்வேலி விவசாய பயிற்சி கல்லூரியில் ஒருநாள் பயிற்சி நடைபெற்றது.

ஆ) கால்நடை வளர்ப்போர்க்கான பயிற்சி, கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் 20 பயனாளிகளுக்கு ஒருநாள் நடைபெற்றது.

இ) ILO – IPEC திட்டத்தின் கீழ் மாதிரி திட்டமாக சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2ஆம் கட்டமாக 75 சிறுவர்களுக்கான தொழிற்பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பின்வரும் தொழிற்பயிற்சிகள் நடைபெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| தையல் பயிற்சி | -22 | கை வேலைப் பயிற்சி | -20 |
| தச்சுவேலை பயிற்சி | -10 | கணனி பயிற்சி | -02 |
| மோட்டார் வாகனம் திருத்தல் | -06 | வெதுப்பக பயிற்சி | -04 |
| உணவு பதனிடல் பயிற்சி | -07 | வயலின் | -01 |
| தொழில் பட்டறையில் வேலை செய்வோர் | -03 | | |

ஈ) வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் நடைபெற்ற கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சியில் எமது நிறுவனத்திலிருந்து 12 பேர் கலந்து கொண்டனர்.

உ) திருகோணமலையில் **“விழுது”** நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பால்நிலை சமத்துவம் பற்றிய நூல் வெளியீட்டு வைபவத்தில் எமது நிறுவனத்தைச் சேர்ந்த 5 பேர் கலந்து கொண்டனர்.

ஊ) பிலிப்பைன்சில் நடாத்தப்பட்ட கிராம அபிவிருத்தி முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நெறியில் எமது நிறுவன இயக்குனர் பங்கு கொண்டார்.

எ) மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் நடாத்திய முரண்பாட்டு கூர் உணவுப் பயிற்சியாளர் பயிற்சி நெறியில் பங்குகொண்டோம்

ஏ) ILO – IPEC நிறுவனம் வவுனியாவில் நடாத்திய வாழ்க்கைத்திறன் பயிற்சிநெறி 25 நாட்கள் நடைபெற்றது. எமது நிறுவன வள அறிஞர் பங்கு கொண்டார்.

**08) சிறு கைத்தொழிற்பேட்டை**

எமது நிறுவனத்தினால் ILO – SIYB பயிற்சி திட்டத்தில் SYB பயிற்சி நெறிகளை முடித்தோர் தொழில் முயற்சிகளை தொடங்கவும், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் இணையமாகவும், ஒரு பயிற்சிக் களமாகவும் **“சங்கமம்”** சிறு கைத்தொழில் பேட்டையை உருவாக்கித் திறந்து வைத்துள்ளோம்.

**09) பொதுவான திட்டங்கள்**

அ) SAPNA நிறுவனத்தின் அனுசரனையுடன் எமது நிறுவனத்தின் அனுசரனையுடனும் தொழிற்பயிற்சிகள் தொடர்பான ஆய்வு யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் பெண் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து WOMEN WING என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இ) ஆட்டுப்பட்டி கிராமம் NECORD திட்டத்தின் கீழ் மீள் புனரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளை தலைமைத்துவம், கணக்கியல், சிறுவர் துஷ்பிரயோகம், வன்முறை, முகாமைத்துவம் போன்ற பயிற்சிகள் எம்மால் வழங்கப்பட்டன.

www.tamilarangam.net

### 10) கண்காட்சி

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் நடாத்தப்பட்ட வியாபாரக் கண்காட்சியில் எமது நிறுவனம் பங்குகொண்டு காட்சிப்படுத்தினோம். மேலும், தையல் பயிற்சி முடித்த பின்னர் தையல் கண்காட்சி நடாத்தப்பட்டது. மேலும், **“சங்கமம்”** சிறு கைத்தொழிற் பேட்டை திறந்து உற்பத்திப்பெருட்களைக் காட்சிப்படுத்தினோம்.

### 11) விழிபுணர்வுக்கான கருத்தரங்குகள்

அ) ILO – SIYB திட்டத்தின் பயிற்சி நெறிகள் அறிமுகம் யாழ் அரச செயலகத்திலும், கிராம மட்ட நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் நடாத்தப்பட்டது.
ஆ) பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு முறைபற்றி கிராம மக்களுக்கும், பணியாளர்களுக்கும் விழிப்புணர்வு செய்யப்பட்டது.
இ) கல்விளான் கிராம மக்களுக்கு கலாசார விழிப்புணர்வு பிரதேச செயலகத்தோடு இணைந்து நடாத்தப்பட்டது.
ஈ) கால்நடை வளர்ப்பிற்கானதும், தொழிற்பயிற்சி தொடர்பாகவும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

### 12) வெளியீடுகள்

கிராம மட்ட மக்களின் குரலாகவும், பின்தள்ளப்பட்ட மக்களின் எண்ணங்களை பிரதான நீரோட்டத்திற்கு எடுத்துவரும் அருவியாகவும் எமது **“தேடல்”** சஞ்சிகை வெளிவருகின்றது.

### 13) முயற்சியாளருக்கான சுழற்சிக்கடன்

வருமான அதிகரிப்புத் திட்டம் மூலம் ரூபா 383,000.00 சுழற்சிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. அறக்கொடை திட்டத்தின் கீழ் ரூபா 32,000.00 சுழற்சிக் கடனாக தொழில் முயற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது.

### 14) ஆலயத்தினுடான பணித்திட்டங்கள்

மேற்படி திட்டத்தினுடாக ஆலய வழிபாட்டோடு ஈடுபாடுடைய கல்வியில் ஆர்வமுடைய வசதி குறைந்த மாணவர்களுக்கு ஒரு மானியத் திட்டத்தையும், முயற்சியாளருகளுக்கு வருமான அதிகரிப்பிற்கான வட்டியில்லாக் கடன் திட்டத்தினையும் வெளிநாடுகளிலுள்ள படிக்கின்ற சேவை நோக்குடைய இளைஞர், கொடையாளிகளின் உதவியுடன் அமுல் படுத்தப்படுகின்றது. மனியத்திட்டத்தின் கீழ் கல்வி கற்கும் மாணவர்கள் நால்வரும், முதியவர்கள் மூவரும், நலிவுற்றோர் இருவரும் மேற்படி திட்டத்தின் கீழ் உதவி பெறுகிறார்கள்.

### 15) மரம் நடுகை

சூழல் பேணலும் பாதுகாப்பும் நடவடிக்கையினை மேற்கொள்ளுமுகமாக மரக்கன்றுகள் மூளாய் முருகன், பிள்ளையார் ஆலயச் சுற்றாடல்களில் நடப்பட்டுள்ளதுடன், மக்களுக்கும், பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டது.

### 16) NECORD திட்டம்

NECORD திட்டத்தின் கீழ் துணைவிக் கிராமத்தினை மீள்புனரமைப்பு அபிவிருத்தி செய்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மக்கள் பங்குபற்றுதலுடனான தேவை மதிப்பீடும் செய்யப்பட்டு திட்ட முன்மொழிவுகள் கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மக்கள் நம்பிக்கையூட்டும் திட்டம் செய்வதற்கான திட்ட முன்மொழிவுகள் கொடுக்கப்பட்டுள்ளது.

மூளாய்,<br>சுழிபுரம்.

T. இராஜேஸ்வரன்<br>தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்

பொறுமையே முன்னேற்றத்தின் முதற்படி

# அறவழிப் போராட்டக் குழு
# Non Violent Direct Action Group (NVDAG)
# செயற்பாட்டு அறிக்கை – 2004

அறவழிப் போராட்டக் குழு 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01. அவசர குடியிருப்புத் திட்டம்
02. வருமானமீட்டும் திட்டம்
03. மலசல கூடத் திட்டம்
04. சிறுவர் கழகங்கள்
05. சிறுவர் நூலகங்கள்
06. அறவழி மழலைகள் பூங்கா
07. பிற் (FIT) நிகழ்ச்சித் திட்டம்
08. மர நடுகைத் திட்டம்
09. அறவழிப் போராட்டம்
10. மழை நீர் சேகரிக்கும் திட்டம்
11. பிற பணிகள்

## 01) அவசர குடியிருப்புத்திட்டம்

வன்னியிலிருந்து தென்மராட்சியில் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 700 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் அல்லாத வீட்டுப்பாவனைப் பொருட்கள் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆதரவுடன் வழங்கப்பட்டன. இக் குடும்பங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தேவைப்பகுப்பாய்வு அடிப்படையில் முன்னுரிமை நிலையில் 100 குடும்பங்கள் அவசர குடியிருப்புத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 16 கிராம சேவையாளர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப் பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான அஸ்பெஸ்ரேஸ் சீற், சீமெந்து மற்றும் மரங்கள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தில் பயனாளிகளின் பங்களிப்பும், ஈடுபாடும் போதியளவு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டத்தின் மேற்பார்வை பணியினை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அதிகாரிகளும், பிரதேச செயலக அதிகாரிகளும் மேற்கொண்டிருந்தனர்.

## 02) வருமானமீட்டும் திட்டம்

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. வன்னியிலிருந்து தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுள் தொழில் வாய்ப்புக்கள் இன்றியிருக்கும் குடும்பங்களில் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நிதியுதவி கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| * | விவசாயம் | 10 பேர் | ரூபா 10, 000 வீதம் |
| * | மீன்பிடி | 10 பேர் | ரூபா 10, 000 வீதம் |
| * | வியாபாரம் | 15 பேர் | ரூபா 10, 000 வீதம் |
| * | ஏனையவை | 15 பேர் | ரூபா 5, 000 வீதம் |

வட்டியில்லாது இக்கடன் 12 மாத தவணையின் பின்னர் கடன் மீளளிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

## 03) மலசல கூடத்திட்டம்

அவசர குடியிருப்புத்திட்டம் வழங்கப்பட்ட 100 பயனாளிகளில் மலசல கூடம் அற்ற குடும்பங்களுக்கு இத்திட்டம் இரு கட்டங்களாக சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற் கட்டத்தில் 20 மலசல கூடங்கள் அமைப்பதற்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. இதற்கான கொடுப்பனவுகள் மூன்று

கட்டங்களாக திட்டத்தின் முன்னேற்றங்களை அவ்வப்போது பார்வையிட்டு வழங்கப்பட்டன. இத்திட்டத்தில் பயனாளிகளின் பங்களிப்பு கூடுதலாக அமைந்திருந்தது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 59 பயனாளிகளுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் நான்கு கட்டங்களாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 79 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு அவை தற்போது அக் குடும்பங்களினால் பாவிக்கப்பட்டு வருகின்றன.

**04) அறவழி சிறுவர் கழகம்**

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆதரவுடன் 9 அறவழிக் கழகங்கள் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 18 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

இக் கழக உறுப்பினர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி, நூலக நிர்வாகப்பயிற்சி போன்றவை அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு கழகத்திற்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**05) சிறுவர் நூலகங்கள்**

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஒன்பது கிராமங்களில் அறவழி சிறுவர் நூலகங்கள் அமைக்கப்பட்டு அவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் வளர்க்கப்பட்டு வருகின்றது. இதற்கு உதவியாக ஒவ்வொரு நூலகத்திற்கும் பெறுமதியான தமிழ் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**06) அறவழி மழலைகள் கல்விப் பூங்கா**

அறவழிப் போராட்டக் குழுவின் நிர்வாகத்தின் கீழ் தென்மராட்சி, வடமராட்சி மற்றும் வலிகாமம் பிரதேசங்களில் மொத்தமாக 25 அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களை செயற்படுத்தி வருகின்றது.

இப்பூங்காக்களின் செயற்பாடுகளுக்கு அறவழி வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றது. ஆயினும், நிதிதட்டுப்பாடு காரணமாக ஆசிரியைகளுக்கான மாதாந்த மதிப்பூதியம் வழங்கப்படுவதில்லை.

**07) பிற் (குஜவு) நிறுவன செயல் திட்டம்**

அறவழிப் போராட்டக்குழுவினை ஒரு பங்காளியாக ஏற்று கொழும்பிலுள்ள பிற் (FIT) நிறுவனம் சிறுவர்களுக்கான செயற்றிட்டத்தினை அமுல் செய்யவுள்ளது. இதன் ஒரு நடவடிக்கையாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள நுணாவில் மேற்கு, நாவற்குளி கிழக்கு ஆகிய இரு கிராமங்களிலும் சிறுவர்களின் நிலைப்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விரு கிராமங்களிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி, விளையாட்டு, சமூக வாழ்வு, ஆற்றல் மேம்படுத்தல் போன்ற விடயங்களில் பகுப்பாய்வுகளும், தேவை மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளன. இக் கிராமங்களில் இருந்து 120 சிறுவர்களுக்கு முன்னோடிப் பயிற்சித் திட்டம் அமுல் செய்யப்பட்டது. அத்துடன் அறவழிப் பணியாளர்களுக்கு ஆற்றல் மேம்படுத்தும் பயிற்சிகளும் கொழும்பில் நடாத்தப்பட்டன.

**08) மர நடுகைத்திட்டம்**

இத் திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக் குழு தென்னை, தேக்கு, சமண்டலை ஆகியவற்றினை பொது மக்களுக்கும், நிறுவனத்தின் திட்டப் பயனாளிகளுக்கும் குறைந்த விலையில் விநியோகித்து மரம் நடுகைத் திட்டத்தினை ஊக்குவித்து வருகின்றது.

### 09) அறவழித் தோட்டம்

நிறுவனத்தின் வளவில் வாழை, எலுமிச்சை, மா, பலா, தென்னை ஆகிய பயிர்கள் நாட்டப்பட்டுள்ளன.

### 10) மழை நீர் சேகரிப்புத் திட்டம்

Lanka Rain Water Harvesting Forum நிறுவனத்தின் அனுசரணையுடன் மழை நீர் சேகரிக்கும் திட்டத்தின் மாதிரி ஒன்றினை நிறுவன வளவில் அமைப்பதற்கு ஆயத்தப்பணிகள் செய்யப்பட்டுள்ளன.

### 11) பிற பணிகள்

#### அ) வெள்ளி விழா

அறவழிப் போராட்டக் குழுவின் வெள்ளி விழா 2004 யூலையில் கைதடி நுணாவிலில் அமைந்துள்ள பணிமனையில் மகோன்னதமான முறையில் கொண்டாடப்பட்டது. வெள்ளிவிழாவை முன்னிட்டு விசேட மலரும், நினைவுச் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன.

#### ஆ) சர்வதேச உறவுகள்

நிறுவனத்தின் சகோதர நிறுவனங்களுடனும், அறவழியின் நண்பர்கள், ஆதரவாளர்களுடனும் அந்நியோன்யமான உறவுகளும், தொடர்புகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

#### இ) இயக்குனர் சபை

நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிகளையும், நிர்வாக ரீதியில் வழிகாட்டுதல்களையும் நிறுவனத்தின் தலைவரான டாக்டர். எஸ். எஸ். அருளானந்தம் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

#### ஈ) மின் அஞ்சல்

நிறுவனத்தின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட மின் அஞ்சல் மூலம் பல்வேறு விதமான சர்வதேச தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின் அஞ்சல் முகவரி : nvdag@rediftmail.com

ஆறவழிப்போராட்டக்குழு,
த. பெ. இல 2,
சாவகச்சேரி.

எம். கே. ஜீவகதாஸ்,
கௌரவ செயலாளர்.

அறியாமையும், ஆசையும் சுயநலத்திற்கு அடிப்படை

# வட இலங்கை சர்வோதயம்
# NORTH CEYLON SARVODAYAM (NCS)
## செயற்பாட்டு அறிக்கை – 2004

வட இலங்கை சர்வோதயம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) கல்வி
02) கலாசாரம்
03) குடிநீர்
04) சுகாதாரம்
05) கால்நடை
06) சேமிப்பு
07) சத்திர சேவை
08) சிரமதானம்
09) மர நடுகை
10) பயிற்சி வகுப்புக்கள்
11) தளபாட வாடகை சேவை
12) நூலக சேவை
13) ஆன்மீகம்

### 01) கல்வி

அ) தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளி நடாத்தப்பட்டு வருகின்றது. இங்கு கல்வி பயிலும் சிறார்களுக்கு இடைநேர உணவு வழங்கப்படுகின்றது.
ஆ) வறுமைக்கோட்டின் கீழுள்ள 3 சிறுவர்களை நிலையத்தில் தங்கவைத்து பாடசாலைக்கு அனுப்பி கல்வி புகட்டப்படுகின்றது.
இ) பெற்றோரை இழந்த 10 சிறுவர்களுக்கு கல்வி கற்பதற்காக மாதாந்தம் ரூபா.2800.00 வீதம் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினூடாக வழங்கப்படுகின்றது.
ஈ) வலயமட்ட முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.
உ) யாழ் பல்கலைக்கழக இந்து தத்துவத்தில் 1ஆம் ஆண்டில் அதிவிசேட புள்ளியைப்பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் புலமைப்பரிசில் வழங்குவதற்காக அமரர் திருநாவுக்கரசு ஞாபகார்த்தமாக ரூபா ஒரு இலட்சம் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.
ஊ) ஞாயிறு வாரந்தோறும் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 128 மாணவர்களுக்கு மாலைநேர பிரசாதம் வழங்கப்படுவதுடன் இந்துவிவகார அலுவல்கள் அமைச்சின் மூலம் சீருடைகள் பெற்றுக் கொடுத்ததோடு பரீட்சையில் சித்தியடைந்த ஐந்து மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.
எ) அமரர் தொண்டர் நினைவாக 50 அறநெறி மாணவர்களுக்கு மணிக்கூடுகள், தொப்பிகள், வழங்கப்பட்டதுடன் அறநெறி மாணவர்கள் அனைவரும் யாழ் குடாநாட்டில் சைவ ஆலயங்களுக்கு கல்வி சுற்றுலாவிற்கு சென்று வந்தனர்.

### 02) கலாசாரம்

60 மாணவர்களுக்கு இலவச நடன வகுப்புகள் நடாத்தப்பட்டதுடன், அமரர் திருநாவுக்கரசு அவர்களின் 3ஆம் ஆண்டு நிகழ்வின்போது இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளில் நடனக்கலையில் திறமையுடைய 10 மாணவர்களுக்கு தலைச்சோடனை அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் அனைவருக்கும் 2005 ஆம் ஆண்டு கலண்டர் வழங்கப்பட்டது. மேலும், சிராஞ்சியம்பதி சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற கிருஸ்ண ஜெயந்தியன்று நுண்கலைக்கூட மாணவிகளின் நடனம் அரங்கேற்றப்பட்டது. பிரதேச மட்டத்தில் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக மரதன் ஓட்டப்போட்டிக்கான வெற்றிக்கேடயமும், பெற்றோல்மக்சும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

### 03) குடிநீர்

இவ்வருடம் புங்குடுதீவு பிரதேசத்திற்கு சாட்டியிலிருந்து 886,093 கலன் குடிநீர் பெறப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், உட்பகுதி மக்களுக்கு 1000 லீற்றர் பிளாஸ்டிக் கொள்கலன்களும், பாடசாலைக்கு 5 கொள்கலன்களும் வழங்கப்பட்டதுடன் சாட்டியிலுள்ள நிறுவன குடிநீர் கிணற்றடிக்கு பாதை பெறுவதகான காணியும் கொள்வனவு செய்யப்பட்டது. மேலும், மடத்து வெளியிலுள்ள ஓர் அங்கத்தவர் வீட்டில் மழைநீர் சேகரிக்கும் தொட்டியொன்று மழைநீர் சேகரிக்கும் அமையத்தின் உதவியுடன் அமைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆத்துடன் யாழ் அரசாங்க அதிபரால் வேலணை பிரதேச செயலர்

ஊடாக 1000 கலன் கொள்ளளவு கொண்ட உழவு இயந்திர பௌசர் ஒன்று எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 04) சுகாதாரம்

ஜீ.ரி.இசற். மூலம் பாடசாலைகளுக்கு அமைத்துக்கொடுத்த மலசலகூடங்கள் இரண்டினை பாவனைக்குப் பயன்படுத்தும் வகையில் தண்ணீர் தொட்டிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றதுடன், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்திற்குரிய தண்ணீர் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்குரிய பணி 2005 தையில் ஆரம்பமாகவுள்ளது. ஆகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மூலம் எயிட்ஸ் சம்பந்தமான விழிப்புணர்வு மக்களுக்கு ஊட்டப்பட்டது. புங்குடுதீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரியை நியமிக்கக்கோரி மக்களை ஒன்றிணைத்து சாத்வீகப் போராட்டம் நடாத்தப்பட்டது. மேலும், மாவட்ட வைத்திய அதிகாரி தங்குவதற்கு வீட்டுடன் வதிவிட வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டது.

### 05) கால்நடை

அ) 4872 கோழிகளுக்கு நோய் தடுப்பு மருந்தும், 425 கோழிகளுக்கு பூச்சிமருந்தும் கொடுக்கப்பட்டது.
ஆ) 10 மாடுகளுக்கு செயற்கைமுறை சினைப்படுத்தலும், 89 மாடுகளுக்கு தொண்டையடைப்பான் தடுப்பூசியும் இடப்பட்டது.
இ) 7 பயனாளிகளுக்கு 25 கோழிகள் வீதம் 175 கோழிகளும், கூடுகளும், நான்கு மாதத்திற்குரிய தீவனமும் மொத்தம் 56 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டுள்ளது.
ஈ) வேலணை கால்நடை வைத்தியரின் உதவியோடு 21 குடும்பங்களுக்கு 812 ஒருநாள் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

### 06) சேமிப்பு

தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி என்பன ஊடாக சிறுவர்களுக்கான கணக்கு நடைமுறைகள் மாதாந்தம் நடைமுறைப்படுத்தி கொடுக்கப்படுகின்றது. மேலும், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிகளினூடாக சுரக்கும் கணக்கு 72 மாதங்களுக்கு பங்குப்பணம் செலுத்தப்பட்ட நிலையில் 19 சிறுவர்களுக்கு சீவியகாலம்வரை மாத உதவிபெறும் நடவடிக்கை என்பன செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

### 07) சத்திர சேவை

நெடுந்தீவுப் பயணிகள் பயணிக்கமுடியாத நாட்களில் தங்குவதற்கு வசதியும், உணவும் வழங்கப்படுகின்றது. கல்முனை பல்கலைக்கழக மாணவர்களின் சுற்றுலாவின் போது 35 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. புங்குடுதீவு கமலாம்பிகை, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு பாடநேர இடைவேளை உணவாக நாளொன்றுக்கு 300 பணிஸ் வீதம் இவ்வாண்டு 12,900 பணிஸ்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

### 08) சிரமதானம்

கிராஞ்சியம்பதி சிவன் தேவஸ்தான வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அதன் வீதிகள் 35 தொண்டர்களுடன் துப்புரவு செய்யப்பட்டது. மேலும், புங்குடுதீவு நடுவுத்துருத்தியில் புதிதாக முளைத்த “பாதீனியம்” செடிகளை கிராம அலுவலர், விவசாய போதனாசிரியர், தொண்டர்கள் ஆகியோருடன் அகற்றி எரிக்கப்பட்டது.

### 09) மர நடுகை

54 பலா மரக்கன்றுகள் நடுவதற்காக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

### 10) பயிற்சி வகுப்புக்கள்

கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப்பருவ உதவிப்பணிப்பாளரினால் வேலனை பிரதேச 25 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிக்கு உணவு, தங்குமிட வசதிகள்

செய்து கொடுக்கப்பட்டன. பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் உதவியுடன் 26 பயனாளிகளிற்கு ஆடு, கோழி வளர்க்கும் பயிற்சிக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் 3 நாட்கள் நடைபெற்ற பழமரப் பயிற்செய்கை பயிற்சி வகுப்பிற்கு கிராமத்திலிருந்து 25 பயனாளிகள் அனுப்பப்பட்டனர். அத்துடன் மழைநீர் தொட்டி அமைக்கும் 5 நாள் பயிற்சிக்காக வேலனை பிரதேசத்திலிருந்து ஒரு மேசன் அனுப்பப்பட்டார்.

### 11) தளபாட வாடகை சேவை

கிராமத்தில் நடைபெறும் கலை, கலாச்சார விழாக்களின் போது மக்கள் தளபாடங்களுக்காக தூர இடங்களுக்கு அலைந்து திரிவதை உணர்ந்து இச்சேவையை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

### 12) நூலக சேவை

அ) சகல துறையைச் சார்ந்த நூல்களும் இங்கே படிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளது. உயர்தர மாணவர்கள் பலர் இங்கே வந்து படிப்பதோடு குறிப்புகளையும் எடுத்து பயனடைகின்றனர்.

ஆ) **“நூல் தேட்டம்”** இலண்டன் அமைப்பிடமிருந்து சிறுவர்களுக்கான 22 புத்தகங்கள் நூலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இ) ஈழத்தமிழரின் தொன்மை, பண்டைய தமிழகம், யாழ்ப்பாண தொன்மை வரலாறு ஆகிய மூன்று நூல்கள் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி. கு. சிற்றம்பலம் அவர்கள் மூலமாக கிடைக்கப்பெற்றது.

### 13) ஆன்மீகம்

மாதாந்தம் யோகர் சுவாமிகள் ஆயிலியப்பூசை நடைபெற்று அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. அத்தடன் நாளாந்தம் சுவாமிகளின் நற்சிந்தனை, கூட்டுப்பிரார்த்தனை செய்யப்படுகின்றது. மேலும், வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிவன் மடாலயத்திலும் நாளாந்தப் பிரார்த்தனையும், பூசையும் நடைபெறுகின்றது.

வட இலங்கை சர்வோதயம்
புங்குடுதீவு – 03

பொ. ஜமுனாதேவி
அறங்காவலர்

தனிமையில் தியானம் இருப்பது
செடியைப் பாதுகாக்கும் வேலிக்கு ஒப்பானது

www.tamilarangam.net

# OOTRU ORGANISATION
## செயற்பாட்டு அறிக்கை – 2004

ஊற்று நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) கிராமிய தற்சார்பு வளர்ச்சித்திட்டம்
02) பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான ஆதரவுத்திட்டம்
03) ஆதரவற்ற பிள்ளைகள் பராமரிப்புத்திட்டம்
04) கோயிலாக்கண்டி புனரமைப்பு - நிக்கொட் திட்டம்
05) விவசாயக் கடன் திட்டம்
06) காற்றாலை மின்சாரம் - முன்மொழிவுத்திட்டம்
07) இணைப்பு வேலைத்திட்டம்
08) சமூக புத்துயிராக்கம்
09) சமூக அபிவிருத்தி - போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள்
10) நிலத்தடி நீரை மாசுபடுத்தாத மலசல கூடங்கள்

### 01) கிராமிய தற்சார்பு வளர்ச்சித்திட்டம்

1988 ஆம் ஆண்டு 50 பின்தங்கிய கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு போரின் விளைவால் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகி தற்பொழுது 15 கிராமங்களில் வெற்றிகரமாக அமுல் செய்யப்படுகின்றது.

* சுழற்சி நிதிக்கடன் தொகை ரூபா 60 இலட்சம்

### 02) பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான ஆதரவுத்திட்டம்

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 4500 பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மிக வறுமையான 125 குடும்பங்களுக்கு வருமான அதிகரிப்புத்திட்டமும், சிறார்களுக்கான கல்வி ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுகின்றது.

* திட்ட மதிப்பீடு ரூபா 10 இலட்சம்

இவர்களுள் 30 குடும்பங்களுக்கு “தியாகி அறக்கொடை” நிறுவனம் மாதாந்தம் ரூபா 300.00 வீதம் உதவித் தொகையாக வழங்குகின்றது.

* மொத்த ஒதுக்கீடு ரூபா 108,000.00

### 03) ஆதரவற்ற பிள்ளைகள் பராமரிப்புத்திட்டம்

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் தாய், தந்தையை இழந்த 50 பிள்ளைகளுக்கு “தியாகி அறக்கொடை” நிறுவனத்தின் நிதியத்திலிருந்து மாதாந்தம் ரூபா 200.00 வீதம் உதவிப்பணம் வழங்கப்படுகின்றது. இப்பிள்ளைகளினது கல்வி, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவை கண்காணிக்கப்படுகின்றன.

* மொத்த ஒதுக்கீடு ரூபா 120,000.00

### 04) கோயிலாக்கண்டி புனரமைப்பு - நிக்கொட் திட்டம்

தென்மராட்சி தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோயிலாக்கண்டி ஜே/296 கிராம சேவகர் பிரிவானது கிராமிய புனரமைப்புத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு ஊற்று நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தேவைக் கணிப்பீடும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. புனரமைப்புத்திட்டம் வடிவமைக்கப்படுகின்றது.

* மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 64 இலட்சம்

**05) விவசாயக் கடன் திட்டம்**

வடமராட்சி பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு தொழில் முயற்சிக்கடன் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

* பெறுமதி ரூபா 3 இலட்சம்

**06) காற்றாலை மின்சாரம் - முன்மொழிவுத்திட்டம்**

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள எழுவைதீவு கிராம அலுவலர் பிரிவில் காற்றாலை மூலம் மின் விநியோகத்திற்கான திட்டம் தயாரிக்கப்படுகின்றது. தற்பொழுது விநியோகிக்கப்படும் 6 மணித்தியால மின்சாரத்தை 24 மணித்தியாலங்களுக்கு விஸ்தரிக்க உத்தேசம்.

**07) இணைப்பு வேலைத்திட்டம்**

பயனாளிகள் மத்தியிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் தேவைப்படும் உதவிகட்கு உரிய நிறுவனங்களை அணுகி இணைப்பை மேற்கொள்ளல்.

**08) சமூக புத்துயிராக்கம்**

போரினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு புனர்வாழ்வுத்திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துவிட முடியாது. ஏனெனில், சமூக ஒத்திசைவு, சமூக பிணைப்பு, மனித விழுமியங்கள் என்பன போரினால் சிதைக்கப்பட்டுள்ளன. ஆகவே, மனித விழுமியங்கள், குடும்ப மீளமைப்பு, சமூக புத்துயிராக்கம் முதலியவற்றை உருவாக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது. இவற்றை மூலக் கருவாகக் கொண்ட வியாபகத் தோற்றத்தை உருவாக்கும் ஆய்வு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ளோம்.

**09) சமூக அபிவிருத்தி - போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள்**

உலக வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட "போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் சமூக அபிவிருத்தி" சர்வதேச மகாநாட்டில் எமது பிரதேச அனுபவங்களைத் தொகுத்துச் சமர்ப்பணம்.

**10) நிலத்தடி நீரை மாசுபடுத்தாத மலசல கூடங்கள்**

யாழ்ப்பாணத்தில் கட்டப்படும் மலசல கூடங்கள் நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றன. இதனால், பல சுகாதார சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆதனால் நிலத்தடி நீரை மாசுபடுத்தாத Separate Septic Tank – Soakage Pit முறையை மக்கள் மத்தியில் புகுத்துவதற்குரிய திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

அல்வாய் கிழக்கு
அல்வாய்

பொ. விக்னேஸ்வரன்
இயக்குனர் நாயகம்

- எழுமின்! விழுமின்! குறிசாரும் வரை நில்லாது செல்மின்
- பெரிய சாதனைகளைப் படைக்க பெரிய அர்ப்பணிப்புகள் தேவை
- ஒருவருக்கு கிடைக்க வேண்டிய நியதியை உலகின் எந்த ஒரு சக்தியாலும் தடுக்க முடியாது.

- சுவாமி விவேகானந்தர் -

# மக்கள் நலன்காக்கும் பிரிவு

# PEOPLE's WELFARE ORGANISATION (PWO)

## செயற்பாட்டு அறிக்கை – 2004

மக்கள் நலன்காக்கும் பிரிவு 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) முன்பள்ளி
02) கிராமிய மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டம்
03) தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையல் பயிற்சி
04) மாணவருக்கான உதவித் திட்டம்

### *01) முன்பள்ளி*

எமது நிறுவனத்தால் சிறப்பாக நடாத்தப்பட்டுவரும் முன்பள்ளியில் 25 சிறார்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த 14.08.2004 சனிக்கிழமை முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. இந் நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் திரு. வே. கா. கணபதிப்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாக உத்தியோகத்தர் திரு. சி. சோதிநாதன் அவர்களும், சமாதான நீதவான் திரு. கி. தங்கவடிவேல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

### *02) கிராமிய மேம்பாட்டு அபிவிருத்தித்திட்டம்*

எமது பிரிவிலுள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களை ஒன்றுகூட்டி அவர்களை பல குழுக்களாகப் பிரித்து சேமிப்பின் பலாபலன்களை எடுத்துக் கூறி சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி ஊக்குவித்து வருகின்றோம். இதேவேளை தேவையான பயனாளிகளிற்கு சுயதொழிலில் ஈடுபட்டு வருவாயைப் பெருக்குவதற்கு கடன் உதவிகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றோம்.

### *03) தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையல் பயிற்சி*

எமது நிறுவனத்தால் மேற்படி பயிற்சி நெறிகளை எமது பணிமனையில் நடாத்தி வருகின்றோம். இதில் 30 மாணவர்கள் பயிற்சி நெறிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். பயிற்சி முழுமையாக முடிந்த மாணவர்களுக்கு வருடாவருடம் சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றோம். இப்பயிற்சி நெறிமூலம் பல மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர்.

04) மாணவருக்கான உதவித்திட்டம்

“Hope for Children” , “Tamil of Northern California” ஆகிய இரு நிறுவனங்களின் நிதியுதவியுடன் எமது நிறுவனம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தாய், தந்தையர் இருவரையும் இழந்த 44 பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதில் “Hope for Children” நிதி உதவித் திட்டத்தில் 30 மாணவர்களும், “Tamil of Northern California” நிதியுதவியுடன் 14 மாணவர்களும் இத்திட்டத்தில் அடங்குவர்.

மேற்குறிப்பிட்ட மாணவர்களில் 30 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ரூபா 1,000.00 பெறுமதியில் சத்துணவு, கல்விச்செலவு, வங்கி வைப்பு உள்ளிட்ட உதவிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

<u>எமது நிறுவன கண்ணோட்டம்</u>

1986.10.23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இருபாலை பேச்சியம்மன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனமாகிய மக்கள் நலன்காக்கும் பிரிவு யாழ் குடாநாட்டு மக்கள் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருந்த போது தன்னாலான சேவைகளை மக்களுக்கு வழங்கி வந்தது. அத்துடன் கோப்பாய் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வை மேம்படுத்தும் முகமாக பல்வேறு திட்டங்களை வகுத்து மக்களின் சுபீட்சமான வாழ்விற்காக உதவிகளைப் புரிந்து வருகின்றது. மேலும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆறு கிராமங்களைத் தெரிவுசெய்து அக்கிராமங்களை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இருபாலை சந்தி
கோப்பாய்

வ. செல்லத்துரை
கௌரவ தலைவர்

கருணை கொண்ட உள்ளம், அது கடவுள் வாழும் இல்லம்

www.tamilarangam.net

# சர்வோதயம்
# SARVODAYA
## செயற்பாட்டு அறிக்கை ~ 2004

சர்வோதயம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) நோராட் திட்டம்
02) போசாக்கு திட்டம்
03) மலசலகூட அமைப்பு
04) சர்வோதய நீதிச்சேவைகள் இயக்கம்
05) இழந்த கல்வி மீளப்பெறல்
06) வியாபாரப் பொருளாதார அபிவிருத்தி
07) கண்ணிவெடி அபாயக் கல்வித்திட்டம்

### 01) நோராட் திட்டம்

சர்வோதய ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் ஊடாக சமரபாகு, நவிண்டில், அரியாலை, ஊரெழு, மானிப்பாய், வடலியடைப்பு, அளவெட்டி, அடிகொல்லை, சுண்ணாகம் ஆகிய கிராமங்களில் சிறுவர்களுக்கான விளையாட்டு மற்றும் கலை, கலாசாரம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. அத்துடன் மேற்குறிப்பிட்ட கிராம சர்வோதய முன்பள்ளிகளை மையமாகக் கொண்டு இயங்கும் சிறுவர் குழுக்களுக்கு 9X4000 = ரூபா 36,000.00 பெறுமதியான விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டது. கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் பரிசுப் பொருட்களுக்காக ரூபா 25,603.00 செலவு செய்யப்பட்டது. மேற் குறிப்பிட்ட கிராமங்களின் மிகுதி வேலைத்திட்டம் இவ்வருட இறுதியில் நடைபெறும்.

### 02) போசாக்கு திட்டம்

சர்வோதய போஷிக்குத் திட்டத்தின் கீழ் நவக்கிரி, அந்திரான், நவபுரம், ஆனந்தபுரம், பத்தனை, குருவளை, துணைவி, கோணற்புலம், ஈவினை ஆகிய 9 கிராமங்களிலுள்ள சர்வோதய பாலர் பாடசாலைகளுக்கு தலா ரூபா 15,000.00 வீதம் மொத்தம் ரூபா 135,000.00 வழங்கப்படும்.

### 03) மலசலகூட அமைப்பு

சர்வோதய கிராமிய தொழில் நுட்ப பிரிவின் ஊடாக 3 கிராமங்களுக்கு மலசலகூட அமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

| | கிராமம் | மலசலகூட எண் | வழங்கும் தொகை |
|---|---|---|---|
| அ) | இடைக்குறிச்சி | 11 x 10,000.00 | ரூபா 110,000.00 |
| ஆ) | உரும்பிராய் வடக்கு | 12 x 10,000.00 | ரூபா 120,000.00 |
| இ) | அச்சுவேலி மேற்கு தோப்பு | 11 x 10,000.00 | ரூபா 110,000.00 |
| | **மொத்தம்** | | **ரூபா 340,000.00** |

### 04) சர்வோதய நீதிச்சேவைகள் இயக்கம்

சர்வோதயம் நீதிச்சேவை இயக்கம் ஊடாக துணைவி, மயிலங்காடு, செல்வபுரம், ஊரெழு, வாதராவத்தை ஆகிய கிராமங்களில் மேற்படி பணியை செய்து வருகின்றது.

| | நிகழ்ச்சித்திட்டம் | வழங்கிய தொகை |
|---|---|---|
| அ) | திருமணமும் திருமண பராமரிப்பு சட்டம் | ரூபா 10,000.00 |
| ஆ) | சொத்துரிமை தொடர்பான சட்டம் | ரூபா 10,000.00 |
| இ) | மாவட்ட மட்டத்திலான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | ரூபா 10,000.00 |
| ஈ) | மாவட்ட மட்டத்திலான கிராம நீதிச்சேவை தொண்டருக்கான பயிற்சி | ரூபா 10,000.00 |
| உ) | மாவட்ட ஆலோசகர் சபைக் கூட்டம் | ரூபா 10,000.00 |
| ஊ) | நடமாடும் சேவை | ரூபா 20,000.00 |

| | | |
|---|---|---|
| எ) | பெண்களை வலுவூட்டல் (கிராமிய பெண்கள் பாடசாலை மாணவிகள்) | ரூபா 20,000.00 |
| | **மொத்தம்** | **ரூபா 90,000.00** |

### 05) இழந்த கல்வி மீளப்பெறல்

இத்திட்டமானது யாழ் மாவட்டத்தில் ஐந்து கிராமங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றன (மிருசுவில், கரம்பைக்குறிச்சி, ஊரெழு, மயிலங்காடு, காக்கைதீவு). இக்கிராமங்களில் உள்ள மன அழுத்தத்திற்குள்ளான பிள்ளைகள், பாடசாலையை விட்டு இடைவிலகிய பிள்ளைகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஆகிய பிள்ளைகளுக்கு மாலை நேர வகுப்புக்கள் நடாத்துதல், விளையாட்டுப்போட்டி கலைவிழாக்கள் வைத்தல், சுற்றுலாவிற்கு கொண்டு செல்லல், பயிற்சிப்பாசறை வைத்தல், கல்வி சம்பந்தமான போட்டிகள் போன்றவற்றை இத்திட்டத்தில் நடாத்தி வருகின்றோம். அத்தோடு அக்கிராமத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடமும் அமைத்து கொடுக்கப்படுகிறது.

மொத்த செலவு - ரூபா 1,609,000.00

### 06) வியாபாரப் பொருளாதார அபிவிருத்தி

இத் திட்டமானது சுயதொழிலை மேற்கொண்டு வருமானத்தை பெருக்குவதற்கு கடன் வழங்குவதாகும். இத்திட்டத்தின் கீழ்:

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | கெருடாவில் | 30 பேர் x 10,000.00 | = | ரூபா 300,000.00 |
| ஆ) | குடாக்கரை | 30 பேர் x 10,000.00 | = | ரூபா 300,000.00 |

மொத்தம் 60 பேருக்கு ரூபா 600,000.00 வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் வருட இறுதிக்குள் சோனகத்தெரு வடக்கு கிராமங்களிலுள்ள பயனாளிகள் தெரிவிலிருந்து கடன் வழங்கப்படவுள்ளது.

### 07) கண்ணிவெடி அபாயக் கல்வித்திட்டம்

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரனையுடன் சர்வோதயம் நடாத்தும் திட்டம் 2004 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 20 பேர் கடமையாற்றுகின்றனர். நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், நிதி இணைப்பாளர், கள உத்தியோகஸ்தர்கள் 20 பேர் உள்ளடக்கப்படுகின்றனர். இத்திட்டம் ஒருவருட ஒப்பந்தமாகும்.

தற்போது சண்டிலிப்பாய், சங்கானை, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் இந் நிகழ்ச்சி நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இந் நிகழ்ச்சியின் நோக்கம் கண்ணிவெடியிலிருந்து மக்களை பாதுகாத்தல், அனைத்து மக்களும் இவ் அறிவை உணர்வு பூர்வமாக அறிதல். இதுவரை 20,011 பேருக்கு வழங்கியுள்ளோம். இத்திட்டத்தினை சமூக மட்ட அமைப்புகள், வீட்டுத் தரிசிப்பு, வீடியோ படக் காட்சி எனபவற்றின் மூலம் வழங்கி வருகின்றோம்.

இந் நிகழ்ச்சிக்கு செலவாகும் மொத்த தொகை ரூபா 2,649,850.00

3, பிளச்சஸ் ஒழுங்கை
சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்

ந. ஸ்ரீமனோகரன்
மாவட்ட இணைப்பாளர்

பொறுமை என்பது கசப்பான செடிதான்.
ஆனால், அது தரும் கனிகள் சுவையானவையே

# சமூக அபிவிருத்தி மன்றம்

# SOCIAL DEVELOPMENT FOUNDATION (SDF)

## செயற்பாட்டு அறிக்கை – 2004

சமூக அபிவிருத்தி மன்றம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) சேமிப்பு
02) கடன் வழங்கல்
03) மரம் நடுகை
04) தையல்
05) கல்வி
06) பயிற்சி வகுப்பு
07) சுகாதாரம்
08) கூட்டம்

### 01) சேமிப்பு

சேமிப்பின் மூலம் தாம் பெற்றுக்கொண்ட நன்மைகளின் நிமிர்த்தம், இவ்வருடம் கூடுதலான சேமிப்பை உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ளனர்.

### 02) கடன் வழங்கல்

சுயதொழில்களான குடிசைக் கைத்தொழில், உலர் உணவு பொதிசெய்தல், விவசாயம், திராட்சை, பேக்கரி, மரக்காலை, கோழி-ஆடு-மாடு வளர்ப்பு, பிடவைக்கடை, சிற்றுண்டிச்சாலை என்பவற்றிற்காக கூடுதான கடன்களை வழங்கியுள்ளது. கூடுதலாக பெண்களிற்கேயாகும். இவற்றிற்கு இதுவரை காலமும் வழங்கப்படாத கடனாக 50,000.00 – 100,000.00 வரை வழங்கப்பட்டு அறவீடு ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 03) மரம் நடுகை

மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக கிராமங்களில் தென்னை, கமுகு, தேசி என்பன இலவசமாக வழங்கியுள்ளோம்.

### 04) தையல்

கிராமங்களில் தையல் தொழிலில் ஈடுபடும் விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கித் தொழில் அபிவிருத்தியை ஊக்குவித்ததோடு, மன்றத்திலும் தையல் வகுப்புகளும், ஓடர் தையல்களும் தைத்துக் கொடுக்கப்படுகிறது.

**05) கல்வி**

பாலர் கல்வியை ஊக்குவிக்குமுகமாக சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி விளையாட்டு விழா நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றப்பட்டது.

**06) பயிற்சி வகுப்பு**

கிராமங்களில் இயங்கும் கழகங்கள் முழுமையாகச் செயற்படக்கூடியதாகக் கழக நிர்வாகிகள், அங்கத்தவர்களிற்கான பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இப் பயிற்சிகளின் தலைமைத்துவம், முகாமைத்துவம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். மேலும், சுயதொழிலில் ஈடுபடுவோர் தொழில் மேம்படத்தக்க முறையிலான பயிற்சிகளும் வர்த்தகத் தொழல்துறை மன்றத்தினால் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இளைஞர்களுக்கான கடன்களும் எம்மால் வழங்கப்பட்டுள்ளது. கிராம ரீதியாகவும், மன்ற ரீதியாகவும் சமாதானம், மனிதஉரிமை மீறல் என்பன பற்றிய கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

**07) சுகாதாரம்**

எயிட்ஸ் சம்பந்தமான கருத்தரங்குகளைக் கிராம ரீதியாகவும், மன்ற ரீதியாகவும் நடாத்தி இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. போஷாக்கு சம்பந்தமாக NDTF நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் பணியாளர் பங்குபற்றி, இதற்கான பயிற்சிகளை மக்கள் மத்தியில் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**08) கூட்டங்கள்**

கிராமங்களில் கழகங்களின் மாதாந்த கூட்டங்கள் நடைபெற்று அறிக்கைகள் மன்றத்திற்கு சமர்ப்பிப்பது வழக்கமாகும். பணியாளர்கள் வெவ்வேறு நிறுவனங்கள் நடாத்திய பயிற்சி வகுப்புகளிலும் பங்குபற்றி பயன் பெற்றுள்ளனர்.

257 / 2, 1ஆம் மாடி
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

திருமதி. ந. ஜெகதீசன்
தலைவர்

வாழ்க்கை இன்னதென்று புரிந்து கொள்வதற்கு முன்னர்
பாதி வாழ்க்கை கழிந்துவிடுகின்றது

# இலங்கை செஞ்சிலுவை சங்கம் ~ யாழ் கிளை
# Sri Lanka Red Cross Society – Jaffna Branch (SLRCS)
# செயற்பாட்டு அறிக்கை – 2004

இலங்கை செஞ்சிலுவை சங்கம் - யாழ் கிளை 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) முதலுதவியும், முதலுதவிப் பயிற்சியும்
02) அம்புலன்ஸ் சேவை
03) நடமாடும் வைத்திய சேவை
04) உலக செஞ்சிலுவை தினமும், அதனோடு இணைந்த மனிதாபிமான சேவையும்
05) செஞ்சிலுவை சங்க செயற்பாடுகள் பற்றிய பரப்புரை
06) HIV / AIDS சம்பந்தமான விழிப்புணர்வு திட்டம்
07) பாடசாலை மட்டத்திலான சுகாதாரமும், சமூக உளவியலும் திட்டம்

## 01) முதலுதவியும், முதலுதவிப்பயிற்சியும்

கீழ்வரும் வணக்கஸ்தலங்களிலும், கல்லூரிகளிலும், பொது வைபவங்களிலும் முதலுதவி சேவை வழங்கப்பட்டது. - ரூபா 80,000.00

அ) நல்லூர், சந்நிதி முருகன் கோயில், வல்லிபுர ஆழ்வார் கோயில், துர்க்கை அம்மன் கோயில், நயினாதீவு அம்மன் கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பொங்கல் உற்சவம், சிவராத்திரி கீரிமலை உற்சவம், சுட்டிபுரம் அம்மன் கோயில் உற்சவம், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில்.

ஆ) மீசாலை பிரிவு மரதன் ஓட்டப் போட்டி, வலந்தலை கோவில் முதலுதவிச் சேவை, மருதனார்மடம் விளையாட்டுப் போட்டி, யாழ் மத்திய கல்லூரி மரதன் ஓட்டப் போட்டி, ஊனமுற்றோர் தின முச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி, கோப்பாய் சரவணபவான் பாடசாலை, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மரதன் ஓட்டப்போட்டி, பெரியபுலம் பாடசாலை துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, யாழ் இந்தக்கல்லூரி மரதன் ஓட்டப்போட்டி, நல்லூர் சங்கிலியன் மன்றம் மரதன் ஓட்டப்போட்டி, கோப்பாய் அன்னை திரேசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மரதன் ஓட்டப் போட்டி, சாவகச்சேரி பிரதேச செயலகம் விளையாட்டுப்போட்டி, ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, போரூட் ஒன்றுகூடல் நிகழ்வு (04 நாட்கள்).

இ) முதலுதவிப்பயிற்சி

கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டன.

i) சுன்னாகம் மின்சாரசபை நிறுவனம்
ii) போரூட் நிறுவனம்
iii) இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு

அத்துடன் எமது தொண்டர்கள் / அங்கத்துவர்களுக்கு இப்பயிற்சி தேவையறிந்து வழங்கப்படுகிறது.

## 02) அம்புலன்ஸ் சேவை

இக்காலப் பகுதியில் 25 நோயாளர்கள் பலாலி விமான நிலையத்திற்கும், கொழும்பு, வவுனியா போன்ற இடங்களுக்கும் கொண்டு சேர்க்கப்பட்டனர். நடமாடும் முதலுதவி நிலையங்கள் நடாத்தப்பட்ட இடங்களில் அவசர அம்புலன்ஸ் சேவையும் எமது கிளையின் வாகனங்கள் மூலம் நடாத்தப்பட்டன.

**03) நடமாடும் வைத்திய சேவை**

15.10.2004 தொடக்கம் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட மனிதாபிமான புனரமைப்பு நிலையத்தின் நிதிப்பங்களிப்புடன் பின்வரும் பிரதேசங்களில் வாரத்தில் ஒருநாள் நடமாடும் வைத்தியசேவை மேற்கொள்ளப்படுகின்றது.

| *பிரதேச செயலர் பிரிவு* | | *இடம்* |
|---|---|---|
| i) | வேலணை | - இறுப்பிட்டி, மண்டதீவு |
| ii) | சங்கானை | - காட்டுப்புலம் |
| iii) | ஊர்காவற்றுறை | - சுருவில், மணற்காடு |
| iv) | கரவெட்டி | - உடுப்பிட்டி |
| v) | கோப்பாய் | - வாதரவத்தை |
| vi) | சாவகச்சேரி | - மந்துவில் |
| vii) | மருதங்கேணி | - பொற்பதி, மணற்காடு |

இந் நிலையங்களுக்கு வைத்தியக்குழு சென்று நோயாளர்களைப் பரிசோதனை செய்து இலவசமாக மருந்துகள் வழங்குவதுடன், ஆரம்ப சுகாதார கவனிப்பாளர்கள் ஊடாக மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான போதனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை நடாத்துவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆகியோர் அனுமதியும், குறித்த பகுதி சுகாதார செயலாளர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளன. ஒரு மாதத்தில் 48 கிளினிக்குகள் நடைபெறுகின்றன.

**04) உலக செஞ்சிலுவை தினம்**

இத் தினத்தையொட்டி தெண்டர்களினால் இரத்த தானமும், பரப்புரை நிகழ்வுகளும் பல்வேறு சிரமதான நிகழ்வுகளும், HIV / AIDS சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகளும் இலவச மருத்துவ சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**05) செஞ்சிலுவை சங்க செயற்பாடுகள் பற்றிய பரப்புரை**

கீழ்வரும் பாடசாலைகளில் நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினால் நடாத்தப்பட்டன.

i) இணுவில் இந்துக்கல்லூரி, இணுவில்
ii) சாயி புனர்வாழ்வு முகாம், மானிப்பாய்
iii) கிருஸ்ணன் கோயில் புனர்வாழ்வு முகாம், கோப்பாய்
iv) இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
v) சைவ பிரகாச வித்தியாலயம், சங்கானை
vi) றிபேக் கல்லூரி, சாவகச்சேரி
vii) மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை
viii) இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊழியர்கள்
ix) பாடசாலைகளுக்கு இடையிலான நாடகப் போட்டி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

**06) செஞ்சிலுவை சங்கத்தில் HIV/AIDS பிரிவினால் கீழ்க்காணும் சேவைகள் ஆற்றப்படுகின்றன.**

அ) நல்லூர் உற்சவ காலத்தில் HIV / AIDS பற்றிய விமிப்புணர்வு கையேடு தயாரித்து மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், அறிவுரைகளும் வழங்கப்பட்டன.
ஆ) பருத்தித்துறையில் இடம்பெயர்ந்த முகாம்களில் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள HIV / AIDS விழிப்புணர்வுத் திட்டத்திற்காக முன்னேற்பாட்டு முகாம் தரிசனம் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆரம்ப கட்ட வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

www.tamilarangam.net

இ) உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பாடசாலைகள் மட்டத்தில் சித்திர, நாடகப் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**07) பாடசாலை மட்டத்திலான சுகாதாரமும், சமூக உளவியலும் திட்டம் (2004 - 2006)**

ஐரோப்பிய யூனியனினதும், டென்மார்க் சங்கத்தினதும் நிதியுதவியுடன் யாழ் மாவட்டத்தில் சுகாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட ஆண்டு 06 தொடக்கம் ஆண்டு 08 வரையிலான பாடசாலை மாணவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு சுகாதார சமூக உளவியல் பயிற்சி வகுப்புகள் மூலமாக அவர்களது பாதிப்பைக் குறைப்பதே இத்திட்டமாகும்.

2800 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதன் ஆரம்ப கட்டத்தில் 828 மாணவர்களை 05 கல்வி வலயங்களிலும் மொத்தம் 09 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதுடன், இவர்களுக்கு மதியத்தில் சத்துணவு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. இம் மாணவர்களின் பெற்றோர்களும், தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளும் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

73, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

வைத்திய கலாநிதி வை. தியாகராஜா
கௌரவ தலைவர்

மனச்சாட்சி என்ற கூண்டில்தான்
ஒவ்வொரு நற்காரியமும் பிறக்கின்றது

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
# TAMILS REHABILITATION ORGANISATION (TRO)
## செயற்பாட்டு அறிக்கை – 2004

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) மழையினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவித் திட்டம்
02) வலுவிழந்தோருக்கான உதவித் திட்டம்
03) கல்விக்கான உதவித் திட்டம்
04) முன்பள்ளி உதவித் திட்டம்
05) நிக்கொட் திட்டம்
06) நலன்புரி நிலையங்களுக்கான உதவித் திட்டம்
07) சிறுவர் நலத்திட்டம்
08) தகவல் சேகரிப்புத் திட்டம்
09) வறிய குடும்பங்களுக்கான உதவித் திட்டம்

### 01) மழையினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவித் திட்டம்

அ) அண்மைக் காலங்களில் பெய்த மழை காரணமாக பாதிப்புக்குள்ளான காக்கை தீவு, பொம்மைவெளி, சூரியவெளி ஆகிய கிராமங்களில் வாழும் 118 குடும்பங்களுக்கு அரிசி, பால்மா, சீனி, பருப்பு, நுளம்பு வலை, தேயிலை, ரின்மீன் ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டன.

ஆ) கடும் மழையினால் பாதிக்கப்பட்டு குடிசைகளில் வாழும் 15 வறிய குடும்பங்களுக்கும், முன்பள்ளிகளுக்கும், சன சமூக நிலையங்களுக்கும் கூரை விரிப்புகள் வழங்கப்பட்டன.

### 02) வலுவிழந்தோருக்கான உதவித்திட்டம்

வலுவிழந்தோர் 15 பேருக்கு சக்கர நாற்காலிகள் நல்லை ஆதீன மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

### 03) கல்விக்கான உதவித்திட்டம்

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் வறிய குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் பிள்ளைகளின் கல்வியினை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

### 04) முன்பள்ளி உதவித்திட்டம்

அ) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வசதி குறைவுற்ற முன்பள்ளிகளின் விளையாட்டு விழாவிற்கு பரிசுப் பொருடகளாகவும், பணமாகவும் வழங்கப்பட்டது.

ஆ) வடக்கு – கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நடாத்திய "உலக சிறுவர் தினம்" மாவட்ட ரீதியாகவும், "ஆசிரியர் தினம்" மாவட்ட ரீதியாகவும் நடைபெற்றது.

இ) முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடாத்தப்பட்டது.

### 05) நிக்கொட் திட்டம்

அ) நிக்கொட்டின் ரூபா 75,000.00 நிதியுதவியுடனும், பயனாளிகளின் கூடிய பங்களிப்புடனும், அவர்களின் விருப்பத்திற்கமைய 380 வீடுகள் (மருதங்கேணி 125, சாவகச்சேரி 125, யாழ்ப்பாணம் 130 வீடுகள்) புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதில் 85% வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. மிகுதி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆ) நிக்கொட் நிதியுதவியுடன் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் பொது மண்டபம் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாக யாழ்மாவட்ட அரச அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது.

இ) நிக்கொட் சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் வெள்ள வடிகாலமைத்தல், கிராம வீதிகள் அமைத்தல், மலசல கூடம் அமைத்தல், வீதி மின்சாரம், குழாய் மூலம் குடிநீர் வழங்கல், சத்துணவு கடன் திட்டம், துறை சார்ந்த தொழிற் பயிற்சிகள் போன்றவை முன்னெடுக்கப்படுகின்றன.

ஈ) நிக்கொட் திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கிராம அபிவிருத்தித் திட்டமான தாவளை, இயற்றாலை, வசந்தபுரம், அரியாலை ஆகிய கிராமத்தில் பங்கேற்பு தேவைக் கணிப்பீடு (PNA) செய்யப்பட்டது. அதில் அரியாலைக் கிராமத்தில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் சன சமூக நிலைய கட்டட வேலை நடைபெற்று வருகின்றது. வசந்தபுரத்தில் கிராமங்களின் குடும்ப விபரங்களின் புள்ளி விபரங்கள் எடுக்கப்பட்டு வருகின்றது.

**06) நலன்புரி நிலையங்களுக்கான உதவித்திட்டம்**

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒடுக்கம்புலவு, கம்பளை, அமைதி தோப்பு, கப்பண்டா ஆகிய நலன்புரி நிலையங்களில் மலசல கூடத் திருத்தம், கிணறு திருத்தம், குழாய்க் கிணறு திருத்தம் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டது.

**07) சிறுவர் நலத்திட்டம்**

யுனிசெவ் நிதியுதவியுடன் சிறுவர் நலத்திட்டத்தின் கீழ் (CAW) போரினால் பாதிக்கப்பட்ட சிறுவாகளின் விபரமும், இவை திரட்டப்பட்ட அடிப்படையில் பாடசாலை இடை விலகிய மாணவர்களை மீள் இணைத்தல், வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணம் வழங்குதல், பாடசாலை இடை விலகிய மாணவர்களை (சிறுவர் தொழிலாளர்) தொழிற் பயிற்சியில் ஈடுபடவைத்தல், வறிய குடும்பத்தை சேர்ந்த மாணவர்களை இனங்கண்டு பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க சிறுவர் இல்லங்களில் சேர்த்தல் ஆகியவை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**08) தகவல் சேகரிப்புத்திட்டம்**

கடந்த காலங்களில் படையினரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு மீள திரும்பியோர், இந்தியாவிலிருந்து மீள திரும்பியோர் விபரங்கள் சேகரிக்கப்பட்டது.

**09) வறிய குடும்பங்களுக்கான உதவித்திட்டம்**

அ) வறுமைக்கோட்டின் கீழ் வாழும் உழைப்பாளரை இழந்த 25 குடும்பங்களுக்கு உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.
ஆ) வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடு அமைப்பதற்கு மரங்கள், சலாகைகள் போன்றவை வழங்கப்பட்டன.
இ) போரினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு மரணச் சடங்கிற்கான மையப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

82/1, காங்கேசன்துறை வீதி
கொக்குவில்
யாழ்ப்பாணம்

சு. ஜெயராஜ்
மாவட்டப் பணிப்பாளர்

நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் இருப்பதே உண்மையான பொக்கிஷம்

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
# THE REFUGEES REHABILITATION ORGANISATION (TRRO)
# செயற்பாட்டு அறிக்கை – 2004

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) பொருளாதார அபிவிருத்திக்கான சுயதொழில் கடன்வழங்கல் திட்டம்
02) மீள் குடியேறிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம்
03) இளைஞர், யுவதிகளுக்கான சுயதொழில் பயிற்சி திட்டம்
04) வெடி பொருட்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டம்
05) எயிட்ஸ் நோயிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டம்
06) பெண்கள் அபிவிருத்தித் திட்டம்
07) வறிய மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்
08) பாலர் பாடசாலைகளை இயக்கும் திட்டம்
09) சிறுவர் கழகங்களை உருவாக்கி இயக்கும் திட்டம்
10) இளைஞர், யுவதிகளுக்கான கணனிப் பயிற்சித் திட்டம்
11) செயற்றிறன் அரங்க இயக்கம்

### 01) பொருளாதார அபிவிருத்திக்கான சுயதொழில் கடன்வழங்கல் திட்டம்

இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 65 குடும்பங்களுக்கு பொருளாதாரத்தை மேம்படுத்த, கிராம மட்ட நிறுவனங்கள் ஊடாக ரூபா 207,400.00 சுயதொழில் ஊக்குவிப்புக் கடனாக ஒருவருட காலத்தில் மீளச் செலுத்துவதற்காக 7.5% சேவைக் கட்டணத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

### 02) மீள் குடியேறிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம்

சாவகச்சேரியில் மீளக் குடியேறிய 20 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கிராம அமைப்புக்களை பலப்படுத்தல், பொதுப் பிரச்சினைகளை இனங்காணல், தீர்வுக்காக வழிப்படுத்தல் வெவ்வேறு நிறுவனங்களினதும், அரச திணைக்களகங்களினதும் சேவை கிடைப்பதற்கு வழிவகுத்தல் போன்றவை இதில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 03) இளைஞர், யுவதிகளுக்கான சுயதொழில் பயிற்சி திட்டம்

எமது நிறுவனத்தால் 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "முயற்சி திறன் விருத்தி மையம்" ஊடாக உயர் கல்வியை தொடரமுடியாத சூழ்நிலையிலுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சியை மேற்கொள்வதற்காக எட்டு பயிற்சி நெறிகள் இலவசமாக நடாத்தப்படுகின்றது. இதுவரை 2150 பேர் இப் பயிற்சியைப் பெற்று வெளியேறியுள்ளனர். இவ்வாண்டு 278 பேர் பயிற்சி நெறியை பெற்று பெற்றுவருகின்றனர். சுயதொழிலை பூர்த்தி செய்தவர்கள் மேலதிக பயிற்சிக்காக யாழ் பல்கலைக்கழகம், தேசிய தொழிற் பயிற்சி மையம், அரச தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் இணைந்து மேற்கொள்கின்றனர். முயற்சி திறன் விருத்தி மையம் யாழ்ப்பாணம், இணுவில், சாவகச்சேரி ஆகிய இடங்களில் இவ் நிலையங்களை நடாத்தி வருகின்றது.

### 04) வெடி பொருட்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டம்

எமது நிறுவனத்தால் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "செல்திறன் அரங்க இயக்கம்" மூலம் வெடி பொருள் ஆபத்து என்னும் கருப்பொருளில் நாடகங்கள் தயாரித்து வெடிபொருட்களின் ஆபத்து மிக்க பகுதிகளில் மேடையேற்றி அதன் தாக்கங்கள் பற்றி விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றோம். இவ் விழிப்புணர்வு செயற்பாடுகள் 269 பாடசாலைகளில் நடாத்தப்பட்டது. இதனால் 103,906 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இவ் ஆண்டு 28 பாடசாலைகளில் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தி 8620 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 118 கிராமங்களில் 35,656 பேர்

பயனடைந்துள்ளனர். இவ்வாண்டு 72 கிராமங்களில் இவ் நாடக ஆற்றுகை நடைபெற்றது. இச் செயற்பாட்டிற்கு 17 ஆற்றுகையாளர்கள் முழுநேர செயற்பாட்டாளர்களாக உள்ளனர். இத்திட்டம் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

**05) எயிட்ஸ் நோயிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுத்திட்டம்**

2002 ஆம் ஆண்டிலிருந்து யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இச்செயற்றிட்டம் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், அரச தனியார் நிறுவனங்களிலும் கருத்தரங்குகள், துண்டுப்பிரசுரங்கள், வீடியோ காட்சிகள் என்பவற்றின் மூலம் எயிட்ஸ் விழிப்புணர்வு செயற்பாடு நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதில் 29,922 பேர் பயனடைந்துள்ளனர். இவ்வாண்டு இரண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அ) யுனிசெவ் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இத் திட்டம் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட 2297 பேருக்கு எயிட்ஸ் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தில் 11 பேர் பணியாற்றுகின்றனர்.

ஆ) சுகாதார அமைச்சின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 20 வயது தொடக்கம் 60 வயது வரையுள்ள பெரியவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் 9235 பேருக்கு எயிட்ஸ் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. அச்செயற்றிட்டத்தில் 9 பேர் பணியாற்றுகின்றனர்.

**06) பெண்கள் அபிவிருத்தித் திட்டம்**

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 20 கிராமங்களில் 20 பெண்கள் அமைப்புக்களை புதிதாக உருவாக்கியும், மீள் உருவாக்கப்பட்டும் பெண்களின் கல்வி, பொருளாதார, உள மேம்பாட்டிற்கான செயல் திட்டங்களை வடிவமைத்து செயற்படுத்துதல் இதன் நோக்கமாகும்.

அ) 200 பெண்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
ஆ) 15 பெண்களுக்கான சிறுகைத்தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் மூலம் கடன்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.
இ) நான்கு மருத்துவ முகாம்கள் நடாத்தப்பட்டுள்ளன.
ஈ) பெண்களின் கல்வி அபிவிருத்திக்கான பொதுக் கருத்தரங்குகள் ஐந்து நடாத்தப்பட்டன.
உ) பெண்களின் உள மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பாரம்பரிய செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக பன்னிரண்டு பாரம்பரிய கலை விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. இதில் 900 பெண்கள் பங்குபற்றினர்.
ஊ) பெண்களுக்கான **"பொலிவு"** சஞ்சிகை வெளியடப்படுகின்றது.
எ) பெண்களுக்கான சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**07) வறிய மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்**

இலண்டன் பட்டயக் கணக்காளர் கம்பனி நிதியுதவியுடன் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு 2004 ஒக்டோபர் மாதம் தொடக்கம் எம்மால் சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**08) பாலர் பாடசாலைகளை இயக்கும் திட்டம்**

கெற்பலி கிராமத்தில் எம்மால் இரண்டு பாலர் பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. இதற்குரிய பராமரிப்பு, ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் என்பன எம்மால் வழங்கப்படுகின்றன.

**09) சிறுவர் கழகங்களை உருவாக்கி இயக்கும் திட்டம்**

எமது நிறுவனத்தால் 12 சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு ஆளுமை விருத்தி, ஆடல், பாடல், விளையாட்டு, கல்வி செயற்பாடுகள் முன்னேடுக்கப்படுவதுடன் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் செயற்றிட்டமும் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சிறுவர் கழகத்தில் 260 சிறுவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

### *10)* இளைஞர், யுவதிகளுக்கான கணனிப் பயிற்சித்திட்டம்

பாடசாலை கல்வியை பூர்த்தி செய்தவர்கள் கணனி அறிவை பெற்றுக்கொள்வதற்காக இப்பயிற்சி நெறி 1998 ஆம் ஆண்டு எம்மால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இணுவில், யாழ்ப்பாணம், சில்லாலை ஆகிய இடங்களிலுள்ள பயிற்சி நிலையங்களில் குறைந்த கட்டணத்துடன் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு 247 பேர் இப்பயிற்சியை பூர்த்திசெய்து வெளியேறியுள்ளனர். இவர்களுக்கான மேலதிக பயிற்சி யாழ் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது அரசாங்கத்தால் உள்வாங்கப்பட்ட 55 பட்டதாரிகள் எமது பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### *11)* செயற்றிறன் அரங்க இயக்கம்

மேற்படி செயற்றிறன் அரங்கம் எம்மால் ஆரம்பிக்கப்பட்டு "அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி" என்ற முகவரியில் இயங்கி வருகின்றது. இதன் பிரதம வளவாளராக திரு. தே. தேவானந்தா (நாடகமும், அரங்கியலும் சிறப்பு கலைப் பட்டதாரி) அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இந்நிறுவனமானது அபிவிருத்தி செயற்றிட்ங்களில் மக்கள் பங்களிப்பை ஊக்கப்படுத்துவதற்காக அரங்கினூடாக (Theatre) மேற்கொண்டு வருவதுடன் அபிவிருத்திக்கான அரங்கு Theatre for Development என்ற எண்ணங்களுடன் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

***** <u>குறிப்பு:</u>

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனது 25வது ஆண்டை இந்த ஆண்டு பூர்த்தி செய்துள்ளது. போர் அனர்த்தத்தால் சிதைந்துபோன தமிழ் தேசத்தை அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு ஏற்ப இனி வருகின்ற மூன்று ஆண்டுகள் தமது செயற்றிட்டத்தை வடிவமைத்துள்ளது. தென்மராட்சி பிரதேச பிரிவில் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக கைதடியில் உப அலுவலகம் ஒன்று கடந்த செப்டெம்பர் மாதம் திறக்கப்பட்டுள்ளது.

106, 4ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

அ. நல்லதம்பி
கௌரவ தலைவர்

எங்கள் பலத்தில் தங்கி நிற்போம் நாங்கள்

# வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம்

# WHITE PIGEON TECHNICAL INSTITUTE OF PROSTHESIS

## செயற்பாட்டு அறிக்கை ~ 2004

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்களை அமுல் செய்து வருகின்றது.

01) கண்ணிவெடி இடர் அபாயக் கல்வித் திட்டம்
02) மிதிவெடி விழிப்புணர்வு வாரம்
03) கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான போட்டிகள்

### *01)* கண்ணிவெடி இடர் அபாயக் கல்வித்திட்டம்

அ) உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கான பயிற்சிநெறி கடந்த 13.05.2004 தொடக்கம் 20.05.2004 வரை நடைபெற்றது.

ஆ) தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் 24.05.2004 அன்று கண்ணிவெடி இடர் அபாயக் கல்வித்திட்டத்தை (MRE) பார்வையிட்டனர்.

இ) தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாவகச்சேரி பிரதேசத்தில் திட்டத்தை இலகுவாக நடைமுறைப்படுத்த உப காரியாலயம் திறக்கப்பட்டது.

ஈ) நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 31,699 பயனாளிகளுக்கு கண்ணிவெடி இடர் அபாயக் கல்வி (MRE) பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் முன்வைக்கப்பட்டன.

உ) வேலணை பிரதேச செயலர் பிரிவில் கண்ணிவெடி இடர் கல்வி (MRE) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் அறிவு மனப்பாங்கு நடத்தை (KAP) தொடர்பாக 596 மக்களிடம் படிவங்கள் பூர்த்தியாக்கப்பட்டன.

ஊ) காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் மிதிவெடி நடவடிக்கை தொடர்பாக எதியோப்பிய நாட்டுப் பிரதிநிதி கண்ணிவெடி இடர் அபாயக் கல்வி (MRE) நிகழ்ச்சித் திட்டத்தினைப் பார்வையிட்டார்.

எ) ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் MTV நிறுவனத்தினர் கண்ணிவெடி இடர் அபாயக்கல்வி (MRE) நிகழ்ச்சித் திட்டத்தினை பார்வையிட்டதுடன் ஒளிப்பதிவும் செய்து கொண்டனர்.

ஏ) வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கண்ணிவெடி இடர் அபாயக்கல்வி (MRE) நிகழ்ச்சித் திட்டத்தினை ECHO நிறுவனத்தினர் பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

### 02) மிதிவெடி விழிப்புணர்வு வாரம்

இச் செயற்பாடானது மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் (DMAO) ஆதரவுடன் நடைபெற்று வருகின்றது.

அ) சக்தி FM வானொலி விளம்பரம்
ஆ) 100 பதாதைகள் கட்டுதல்
இ) நான்கு உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்
ஈ) ஒரு இலட்சம் கண்ணிவெடி தடை ஒப்பந்தம் தொடர்பான பிரசுரம் விநியோகித்தல்
உ) 500 முச்சக்கரவண்டி, பஸ்களுக்கான பதாதைகள் கட்டுதல்
ஊ) ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கான கொடி வழங்குதல்
எ) திட்ட அறிமுகவிழா போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 03) கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான போட்டிகள்

யாழ் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப்போட்டி நடாத்தப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா 30.10.2004 அன்று நடைபெற்றது.

63, பலாலி வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

க. குமாரகுலசிங்கம்
செயலாளர்

முன் சிந்தித்து பின் செயற்பட்டால் உனக்கே வெற்றி

# RAIN WATER HARVESTING PROJECT IN THE NORTH

Lanka Rain Water Harvesting Forum had their first awareness programme in Jaffna at the Council of Non Governmental Organisation Jaffna District at Temple Road, Jaffna on 22.01.2004, with the council President as the Chief Guest.

Mr. Sugith Shiroman the Coordinator while inaugurating the awareness programme on Rain Water Harvesting clearly demonstrated that people in the North have limited access to water sources. Ground water is the main source of water, and in many places it is polluted and highly concentrated Calcium. Hence Rain Water Conservation will be a boon to the people. Lanka Rain Water Harvesting Forum decided to construct 12 demonstration Tanks in the twelve selected AGA Divisions in the Jaffna District, where the community is having difficulties in obtaining safe drinking water. With this in View Rain Harvesting Forum conducted an Awareness Symposium and Exhibition at Nawalar Hall, Jaffna on the 16th July 2004 for the professionals, officers, general public and school children in the Jaffna District.

"Gift from the Sky" video programme on Rain Water Harvesting was shown to the Government officers and the Local community leaders and Non Governmental Organisation to acquaint themselves about the Rain Water Harvesting Technology and the implementation of this pilot project. Quiz contest was held and three school children were awarded prizes.

After this mason training programme on construction of 8000 litres Ferro Cement Doomed Rain Water Harvesting Tank under dual purpose Rain Water Harvesting project was conducted at the District Agricultural Training Center, Thirunelvely, Jaffna from 17th to 21st July 2004. Ten selected masons, recommended by respective NGOs working in the selected divisions participated. On completion of the training they were awarded certificates.

These trained masons will take part in the constructions of the Rain Water Harvesting demonstration tank in the respective sites chosen already.

After a weeks time Mr. Alex Knox of AUSAID along with the President and field Officer Mr. Rudra Wijendra visited Agricultural Center where the model tank was constructed. He was impressed by the work and enquired about the functioning.

Rain Water Harvesting Forum is an NGO working to promote the concept of Rain Water Harvesting for domestic use and home gardening. They have successfully implemented these projects in Puttalam, Amparai, Kurunegala and in other parts of Sri Lanka. This is the first time they have decided to venture in the Jaffna District.

Rain Water Harvesting project should be undertaken in large numbers as many are facing difficulties for drinking water during drought season. Therefore conservation of rain water will no doubt prove beneficial to all, and Rain Water Harvesting Forum will definitely have the support of the people.

There was a delay in the implementation of the project in Jaffna as scheduled due to funds forthcoming from AUSAID. The Coordinator informed the Council recently that necessary fund has been received and that the project will commence early.

# MEETINGS WITH FOREIGN AND LOCAL DIGNITARIES

A team of Japanese NGOs visited the Council on 23.01.2004 and had discussion with the member organisations.

The Ambassador for Norway, His Excellency Hans Pradskar and Eric Solheim along with the Embassy officials met the NGOs Council members on the 9th of March 2004. The discussion centred Development, Peace Process and Election 2004.

British High Commissioner, His Excellency Stephen Evans along with his officials visited the Council on the 11th of March, 2004 and had discussions with the members. The discussion confined to Rehabilitation work in Jaffna and NGOs activities.

Ms. Tarja Virtanen, Asia Pacific Bureau for communication and information visited the Council on the 15th of March, 2004 and met the members. Assisting the Council of NGOs in capacity building was indicated.

PAFFREL Election Monitoring Team comprising Dr. Jehan Perera, Mr. Nimal Fernando and Mr. S. Sivagunanathan met the Council members and discussed various matters in regard to council joining PAFFREL in election monitoring in the Jaffna District.

Mr. Simon Bond of the Sri Lankan affairs in the UK Foreign office together with Ms. Margret Tongno and Niluksan Swarnarajah of the British High Commission in Sri Lanka paid a visit to the Council on 20.05.2004. The discussion centred mainly on Rehabilitation and Development in the Peninsula.

On 26.02.2004 National Peace Council had a meeting on women's participation in the Peace Process and in Public Life.

Caford Team visited the Council on 03.06.2004 and a discussion ensued. Some of the members participated.

Ms. Kjersti Tomsdall Senior Second Secretary of the Norwegian Embassy called at the Council on 25.08.2004 and met the Council members to acquaint herself with the general situation in regard to Peace Process and Rehabilitation in Jaffna.

Ms. Dharshini Seneviratne Coordinator, Commonwealth Education Fund paid a visit to the Council on 14.09.2004 to have a discussion on the project.

Mr. Eric Solheim, Norwegian special Envoy along with Norwegian Ambassador, His Excellency Hans Pradskar and a delegation of the Embassy met the members of the council and Jaffna civil groups on 15th September 2004. All pointed out the problems of the people, benefits of the cease fire and urged that the stalled peace process should be restarted by bringing both the Government and the LTTE to the negotiation table.

Fifty member delegation of Dewasarana centre, Kurunagala visited Jaffna and had discussion with the representatives of the Council of NGOs on 21.09.2004, they asserted what they saw and heard here are quite contrary to what they came to know through the Medias in the South which is the real threat to peace negotiations.

General officer Commanding, Security Forces (Jaffna) Palaly Head Quarters Major General Sunil Thennakoon had a meeting with the members of the Council on 06.10.2004 at the Councils office. Discussion centred the general situation and problems faced by the people.

Delegation from the Swedish Embassy headed by Mr. Lennart Peck visited the Council on 08.10.2004 and met the council members. They were briefed of the situation in Jaffna and the needs of the people.

Ruhunu University lecturers and students comprising 45 members paid a visit to the Council on 19.10.2004 to study the situation prevailing in Jaffna vis – a – vis conflict and peace move. After the discussion they informed that the real situation is not highlighted by the Southern medias and that they were able to know lot of information after their visit to Jaffna.

Two members of Norwegian YMCA called at the Council office on 21.10.2004 and had a discussion with the President and Mr. P. Vigneswaran.

Mr. John Alosious, Carithas France and European Union met the Council members on 30.10.2004. The problems of the peoples and the projects done by both local NGOs and INGOs were discussed.

New Country Director, Movi Mondo paid a visit to the Council in 04.11.2004.

Paula Green Group and Non Violent Peace Force had a meeting with the members of the Council on 12.11.2004. They showed keen interest in knowing the present situation in Jaffna.

Head of Department of Geography, Jeyawardenepura University, lecturers and students numbering 50 of the same faculty had a meeting with the Council members on 29.11.2004. They were shocked to know of the incidents happened in the District during the conflict and amazed to see the number of check points of the army irrespective of the MOU.

# மக்கள் சேவையில் ஒன்றிணைந்த உள்ளங்களுக்கு நன்றி

இந் நாட்டில் ஓர் நிறைவான சமாதானத்தை எதிர்பாாத்து ஆரம்பித்த இவ்வாண்டின் நிகழ்வுகள் பின்னர் சமாதானமா? யுத்தமா? என்னும் இரு நுழைவாயிலுக்கும் மத்தியிலே செய்வதறியாது, விழிமூடாது தற்போதய ஆண்டின் இறுதி நாட்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஆரம்பம் தொட்டு இன்றுவரை சமாதானத்தையே மையமாக வைத்து மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை நாம் ஒன்றிணைந்து ஆராய்வதற்கும், அங்கத்துவ நிறுவனப் பிரதிநிதிகளின் ஆக்க பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களை உரிய நேரத்தில் உரிய இடத்தில் அனைத்தையும் ஒன்று கூட்டி எமக்கு மிகவும் ஒத்துழைப்பு நல்கிய நிர்வாக உத்தியோகத்தர் திரு. சி. சோதிநாதன் அவர்களுக்கும், தகவல்களைத் தவறாது உரியவர்களிடம் பரிமாறுவதற்கு உதவி புரியும் திரு. க. அருள்நேசன் அவர்களுக்கும் இவ்வேளையில் இணையத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமக்கு நிதியுதவி வழங்கி இவ்வருட செயற்பாட்டிற்கு உறுதுணை புரிந்த சுவிஸ் தூதரகத்திற்கும், கொழும்பு மனிதநேய அமைப்புகள் ஒன்றியத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டு செயற்பாடுகள் யாவும் சிறப்புடன் நடைபெற அயராது ஒத்துழைத்த தலைவர், உபதலைவர், உபசெயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கணனி சம்பந்தமான ஆலோசனைகளையும், தொழில் நுட்பங்களையும் சிரமம்பாராது இணையத்திற்கு என்றும் வருகைதந்து வழங்கிவரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனப் பிரதிநிதி திரு. இ. சர்வானந்தா அவர்களுக்கும், இணையக் கணக்கறிக்கைகளை ஆய்வு செய்வதில் உதவி புரிந்த சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனப் பிரதிநிதி திரு. S. திருக்குமாருக்கும், விடுமுறையில் நான் சென்றிருந்த காலத்தில் அவ் இடைவெளியை நிரப்பி கூட்டங்கள் தடையின்றி நடைபெறுவதற்கு ஒத்தாசை புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இணையத்தின் முக்கிய செயற்பாடுகளை தகுந்த முறையில் பிரசுரித்து வரும் வீரகேசரி, தினக்குரல், உதயன், நமது ஈழநாடு, வலம்புரி ஆகிய பத்திரிகை நிறுவனங்களுக்கும் எமது நன்றியைப் பகிர்வதுடன் எமக்கு இலவச பத்திரிகை விநியோகத்தை மேற்கொள்ளும் தினக்குரல், உதயன், நமது ஈழநாடு ஆகியவற்றிற்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"**

ஜெ. யோசப்
கௌரவ செயலாளர்

40, கோயில் வீதி
யாழ்ப்பாணம்